இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

விழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 126 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – கார்த்திகை 30 – சனிக்கிழமை 16 டிசம்பர் 2023 – திருச்சி ★★ 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 126: Thiruvalluvar Year - 2054 - Karthigai 30 - Saturday 16 December 2023 - Trichy ★★ 10 Pages ₹ 5.00

# அன்று கண்டதும்; இன்று காண்பதும் அதே நிலா!



**நெல்லைச் சீமையில் 2007ஆம் ஆண்டு டிசம்பர் 15, 16 ஆகிய இரண்டு நாட்கள் கழக இளைஞர் அணியின் முதல் மாநில மாபெரும் மாநாட்டை - அப்போதைய கழக இளைஞர் அணிச் செயலாளர் - தற்போதைய கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மிக பிரம்மாண்டமான முறையில் எழுச்சியோடு நடத்திக் காட்டினார். இம்மாநாட்டிற்காக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், 'இளைஞர்களுக்கு வழி விடுவோம்' எனும் தலைப்பில் முரசொலி'யில் 2007 நவ.7-ந் தேதி முதல் டிச.2-ந் தேதி வரை தொடர்ச்சியாக 25 'கலைஞர் கடிதங்கள்' எழுதி உடன்பிறப்புகளுக்கு அழைப்பு விடுத்தார். தற்போது சேலத்தில் 2023 - டிச.24 அன்று கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நடத்த விருக்கும் கழக இளைஞர் அணியின் 2-வது மாநில மாநாட்டையொட்டி, அக்கடிதங்களை இங்கே எடுத்து வெளியிடுவதில் மகிழ்கிறோம்.**

**உடன்பிறப்பே,**

பழைய நினைவுகளை அசை போடும் பொழுது பனிக்கட்டியிலிருந்து கிளம்புகிற ஆவியை ரசிப்பது போன்ற ஓர் இன்பம்!

தம்பி மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெறவிருக்கும் நெல்லை இளைஞர் அணி மாநாட்டுக்கு அணிவகுத்துச் செல்லும் அடுத்த தலைமுறை உடன்பிறப்புக்களுக்கு; அதே நெல்லை மாவட்டம், கோவில்பட்டியில் 1950ஆம் ஆண்டு என்னுடைய 25வது வயதில் தலைமையேற்று, இரு நாட்கள் மாநாட்டை நடத்தியதையும் - நான் அங்கே ஆற்றிய உரையை அச்சியற்றி சென்னை முன்னேற்றப் பண்ணை எனும் பதிப்பகத்தார் புத்தகமாக வெளியிட்டதையும் - இதோ நினைவு படுத்திக் கொள்கிறேன். அதற்கு 57 ஆண்டுகளுக்குப் பிறகு நெல்லையிலே இளைஞர் அணி மாநாடு நடைபெறுகிற நேரத்தில் - அப்போது என்ன பேசினேன் என்பதை இளைய திலகங்கள் இதயத்தில் பதித்துக் கொள்ள ஏதுவாக அதனை இப்போது இயக்க வளர்ச்சிக்கும் கட்டுக்கோப்புக்கும் பயன்படுத்திக் கொள்ள வேண்டுகிறேன்.

"கோவில்பட்டியில் கூடும் இம்மாநாட்டில் நான் தலைமை வகிப்பதில் குறிப்பிடத்தக்க அம்சமொன்றுள்ளது. சென்ற ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தின் துவக்க விழாவில் கோவில்பட்டியில் நானேதான் கலந்து கொண்டேன். இப்போது அதே நகரில் மாநாட்டிலும் கலந்து கொள்கிறேன் என்பதை நினைக்கும்போது மட்டிலா மகிழ்ச்சி கொள்கிறேன்.

என் போன்றவர்களுக்கு இந்தச் சிறப்பு வழங்கப்படுவதின் நோக்கம் இயக்கம் இளைஞர்களின் சொத்து - உழைப்பாளிகள் அமைத்த மாளிகை - அதில் உல்லாசபுரியினர் வாழ முடியாது என்பதை நாட்டுக்கும் - நாட்டிலே நம்மைப் பற்றி நச்சுக் கருத்துக்களை நடமாட விடுபவர்களுக்கும், எடுத்துக்காட்டத்தான் என்பது என் எண்ணம்.

தலைமை வகிப்பது என்பது கட்சியிலே ஒரு நட்சத்திரத்தை உண்டாக்குவது என்பதல்ல. அப்படி தலைமை வகிப்பவர்கள் கருதினாலும் - அல்லது தலைமை வகிப்பவரைப் பற்றிக் கருதினாலும் அது பெரும் தவறு! வரப் போகும் போராட்டங்களிலே இதுவரை கழகத்தின் சார்பாக நடைபெற்ற மாவட்ட மாநாடுகளின் தலைவர்கள் வரிசைக் கிரமமாக களத்திலே நிறுத்தப்பட வேண்டும். அந்தந்த மாவட்ட மாநாட்டுத் தலைவர்களின் சார்பாக நான் தலைமைக் கழகத்தை கேட்டுக் கொள்வதெல்லாம் 'எங்களை எதிர்காலப் போராட்டத்தின் தளபதிகளாக்குங்கள்' என்பதுதான்! மார்பிலே வேல்தாங்கி மரணத்தை அணைப்போமே தவிர மாற்றாரிடம் சரண்புக மாட்டோம். மாசற்றக் கொள்கைகளை எதிரிகட்குக் காணிக்கையாக்க மாட்டோம். இந்த உறுதியோடுதான் இன்றைய மாநாட்டுக்குத் தலைமை வகிக்கிறேன்.

தென்னிந்திய நல உரிமைச் சங்கமாக ஜஸ்டிஸ் கட்சியாக - திராவிடர் கழகமாக - திராவிட முன்னேற்றக் கழகமாக நாம் வளர்ந்திருக்கிறோம். ஒவ்வொரு மாறுதலின்போதும் ஒவ்வொரு புதுமை ஏற்பட்டு வந்திருக்கிறது. சுயமரியாதைக் கொள்கைகளைத் தேயவிடாமல் சுயநலத்திற்காக இயக்கத்தைப் பயன்படுத்திக் கொள்ளாமல் தொண்டுபுரிந்த சுத்த வீரர்கள்தான் இன்று அணி வகுத்து நிற்கிறோம். ஆனால் இன்றைய மாறுதல் - அதாவது சென்ற ஆண்டு நமது இயக்கத்தில் ஏற்பட்ட மாறுதல் நாமாகத் தேடிக் கொண்டதல்ல.

## கலைஞர் கடிதம்

செப்டம்பர் 17. . . . நாம் மறக்க முடியாத நாள் பெரியார் பிறந்த நாள். பெரியார் பிறந்த நாளும் - நாம் அவரை விட்டுப் பிரிந்த நாளும் அதுதான்! சிந்திய கண்ணீரைத் துடைத்துக் கொண்டு மீண்டும் செயலில் இறங்கப் புறப்பட்ட நாள். அந்நாள் தோன்றி ஒரு ஆண்டு நிறையப்போகிறது. இந்த ஒரு ஆண்டில் நாம் போட்ட திட்டங்கள் எத்தனை - நாம் புரிந்த செயல்கள் எத்தனை - நாம் அடைந்த வெற்றிகள் எத்தனை - நாம் செய்யாமல் விட்டு விட்ட காரியங்கள் எத்தனை - என்பதை நன்றாகச் சிந்திக்க வேண்டும்.

பிரச்சாரக் குழு அமைத்தோம். சட்ட திட்டக் குழு அமைத்தோம். செயற்குழு அமைத்தோம். அமைப்புக் குழு அமைத்தோம், பொதுக்குழு அமைத்தோம். இந்த அமைப்புகள் எப்படியெப்படி வேலை செய்திருக்கின்றன என்பதை வரப்போகும் மாகாண மாநாட்டிலே நினைக்கத்தான் போகிறோம். நினைப்பின் விளைவு முழு நிம்மதியாக இருக்காது. ஏனெனில் நாம் செய்யாமல் விட்ட பணிகள் நிரம்ப உண்டு!

குறை சொல்லப் போகிறேன் என்று யாரும் கருத வேண்டாம். இயக்கம் குழந்தையென்பதும் - அதன் குரல்வளையைப் பிடித்துக் கொல்ல குள்ள நரிகள் சமயம் பார்த்திருப்பதும் யாரும் அறியாததல்ல. குழந்தை - ஓராண்டுக் குழந்தை - பேசிப் பாட வேண்டாம். ஆடியோட வேண்டாம். பாலாவது சாப்பிட்டு உடலைப் பலமாக்கிக் கொள்ள வேண்டாமா என்பதுதான் கவலை. 'குழந்தைக்குப் பாலுண்ண ஆசைதான் - கொடுப்பவர்கள் எங்கே?' என்று ஒரு குரல் கிளம்பலாம். அந்தத் தாய் வேலையைச் செய்ய வேண்டியவர்கள் இயக்கத்தின் முன்னணியினராக இருப்பவர்கள் மட்டுமல்ல - இயக்கத்தின் தொண்டர்களுங்கூடத்தான்.

ஒரே ஆண்டில் ஐந்நூறு கிளைகளை நிறுவியிருக்கிறோம். எந்த இயக்கமும் செய்து காட்ட முடியாத அரும்பெரும் செயல்! ஐந்நூறு கிளைகள். ஐம்பதுக்கு மேற்பட்ட பிரச்சாரக் காளையர்கள். அன்றாடம் கூட்டங்கள். மாவட்டந்தோறும் மாநாடுகள். இது தித்திப்பான செய்திதான். ஆனால் பூரண திருப்தியளிக்கக் கூடியதல்ல.

பல ஆண்டுகளாக இதைத்தான் செய்து பழக்கப்பட்டிருக்கிறோம். மேடைகள் அமைப்பதும் - பேச்சாளர்களை அழைத்து மேக மண்டலமதிரப் பேசச் செய்வதும் - அதன் விளைவாகப் பெரும் பகுதியினரை நம்மவராக்குவதும் தேவையற்ற வேலையென்று கூறவில்லை. நம் கொள்கையை கீதமாக்கிக் கொண்டவர்கள் - நம் பாதையில் நடந்து வரத் துணிந்தவர்கள் - நாலா பக்கங்களிலும் சிதறிக் - கிடக்கிறார்கள். அவர்களை இணைக்க முடியவில்லை. இணைக்கும் முயற்சி எடுத்துக் கொள்ளப்படவில்லை.

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

## புயலால் ஏற்பட்ட மிகப் பெரிய சேதங்களைச் சரிசெய்ய வேண்டியுள்ளது!

# நிவாரணத்துக்கு ரூ.12,659 கோடி வழங்கிட வேண்டும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் - ஒன்றியக் குழுவிடம் வலியுறுத்தல்!

**சென்னை, டிச.16-**

**மிக்ஜாம் புயலால் ஏற்பட்ட பாதிப்புகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்ட ஒன்றியக் குழுத் தலைவர் மற்றும் உறுப்பினர்களுடன் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆலோசனை நடத்தினார். மேலும் புயல் மழையால் ஏற்பட்ட பாதிப்புகளை சீர்செய்திட தற்காலிக நிவாரணத் தொகையாக 7,033 கோடி ரூபாயும், நிரந்தர நிவாரணத் தொகையாக 12,659 கோடி ரூபாயும் வழங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (14.12.2023) தலைமைச் செயலகத்தில், மிக்ஜாம் புயலால் ஏற்பட்ட கனமழையால் சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்ட ஒன்றியக் குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களுடன் ஆலோசனை மேற்கொண்டார்.

### கடும் மழை வெள்ளத்தால் பெரிதளவு ஏற்பட்ட சேதம்!

மிக்ஜாம் புயலால் ஏற்பட்ட கடுமையான மழைப்பொழிவின் காரணமாக பெருநகர சென்னை மாநகராட்சி, திருவள்ளூர், செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் பல்வேறு குடியிருப்பு பகுதிகளில் வெள்ள நீர் சூழ்ந்து, வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்ததால் பொதுமக்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிப்பிற்குள்ளானது. மேலும் வரலாறு காணாத கனமழையின் காரணமாக, சாலை, பாலம், நீர்நிலை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் உட்கட்டமைப்புகளுக்கும் பெரிதளவு சேதம் ஏற்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களது உத்தரவின் பேரில் மேற்கொள்ளப்பட்ட மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளின் காரணமாக, பாதிப்பிற்குள்ளான பகுதிகளில் மிக விரைவாக இயல்பு நிலை திரும்பியது.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (14.12.2023) தலைமைச் செயலகத்தில், மிக்ஜாம் புயலால் ஏற்பட்ட கனமழையால் சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்ட ஒன்றியக் குழுவின் தலைவர், தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் ஆலோசகர் குணால் சத்யாத்ரி அவர்களிடம், மிக்ஜாம் புயல் பாதிப்புகள் மற்றும் நிதி ஒதுக்கீட்டிற்கான கோரிக்கை மனுவினை (Memorandum) அளித்தார். உடன் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, ஒன்றியக் குழு உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 5.12.2023 அன்று இந்தியப் பிரதமர் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில், மிக்ஜாம் புயலின் தாக்கத்தினால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை சீரமைக்கவும், வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள பொது மக்களுக்கு உரிய நிவாரணம் வழங்கவும், தமிழ்நாட்டிற்கு உடனடியாக ரூ.5,060 கோடி நிதியை விடுவிக்குமாறும் கோரியிருந்தார்.

### ஒன்றிய அரசிடம் நிதி கோரிய முதல்வர்!

அதைத் தொடர்ந்து, ஒன்றிய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் அவர்கள் 7.12.2023 அன்று சென்னை வருகை தந்து, 'மிக்ஜாம்' புயல் பெருமழையால் ஏற்பட்ட பாதிப்புகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடன் தலைமைச் செயலகத்தில் ஆலோசனை மேற்கொண்டார். முதலமைச்சர் அவர்கள், மிக்ஜாம் புயலின் காரணமாக ஏற்பட்ட பாதிப்புகளைத் தெரிவித்து இடைக்கால நிதி உதவி கோரும் கோரிக்கை மனுவினை அளித்து, தமிழ்நாட்டிற்கு உடனடியாக நிதியை விடுவிக்குமாறு கோரிக்கை விடுத்தார்.

இதனைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் வெள்ளம் பாதித்த பகுதிகளை பார்வையிட வந்த ஒன்றிய அரசின் பல்துறை ஆய்வுக் குழு, 12.12.2023 மற்றும் 13.12.2023 ஆகிய நாட்களில் மழை, வெள்ளத்தால் ஏற்பட்ட

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 16-12-2023



# நாடாளுமன்றத்தையே காக்க முடியாதவர்கள்...

இந்தியாவின் புதிய நாடாளுமன்றக் கட்டடத்தை கடந்த மே 28 ஆம் தேதியன்று பிரதமர் நரேந்திரமோடி திறந்து வைத்தார். கடந்த 2019 ஆம் ஆண்டு இதற்கான கட்டுமானப் பணிகள் தொடங்கியது. அடிக்கல் நாட்டு விழாவை 2020 ஆம் ஆண்டு டிசம்பர் 10 அன்று பிரதமர் நரேந்திரமோடி நடத்தினார். 'இந்திய மக்கள் அமிர்தப் பெருவிழாவுக்காக ஒரு பரிசை வழங்கியுள்ளனர்' என்று பெருமையாகச் சொல்லிக் கொண்டார் பிரதமர்.

மூன்று நுழைவாயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஞான துவார், சக்தி துவார், கர்ம துவார் என்றெல்லாம் பெயர் சூட்டினார்கள். புதிய கட்டடத்தின் மக்களவை அறையில் செங்கோல் வைக்கப்பட்டுள்ளது. 65 ஆயிரம் சதுர அடியில், பழைய நாடாளுமன்றக் கட்டடத்தை விட மூன்று மடங்கு பெரிதாகக் கட்டினார்கள். 940 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டது.

புதிய நாடாளுமன்றம் என்பது 140 கோடி மக்களின் பிரதிபலிப்பாகும் என்றும், இந்தியாவின் உறுதியை உலகுக்கு எடுத்துரைக்கும் நமது ஜனநாயகத்தின் கோவில் என்றும், இந்தியா அடிமை மனப்பான்மையை விட்டு கலையின் பழமையான பெருமையைத் தழுவி நிற்பதற்கு இந்த நாடாளுமன்றக் கட்டடம்தான் வாழும் உதாரணம் என்றும், இந்தக் கட்டடத்தின் ஒவ்வொரு துகளிலும் ஒரே பாரதம் உன்னத பாரதம் என்ற உணர்வை நாம் பெறுகிறோம் என்றும் சொல்லிக் கொண்டார்கள். இந்த அத்தனை பெருமைகளையும் கேள்விக்குள்ளாக்கிய, கேலிக்குள்ளாக்கிய நாளாக நேற்றைய தினம் அமைந்து விட்டது. நான்கு பேர் உள்ளே நுழைந்து கண்ணீர் புகையை வீசிவிட்டார்கள். இந்தியாவின் பாதுகாப்பை நினைத்து அனைவரது கண்களும் எரிகிறது.

2001 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்துக்குள் தீவிரவாதத் தாக்குதல் நடந்தபோதும் பா.ஜ.க.தான் ஆட்சியில் இருந்தது. இப்போதும் பா.ஜ.க.தான் ஆட்சியில் இருக்கிறது. 22 ஆண்டுகளுக்குப் பிறகு அதே நாளில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

நாடாளுமன்றத்துக்குள் செல்ல நான்கு கட்ட கடும் சோதனைகள் இருக்கும் நிலையில், தடை செய்யப்பட்ட பொருள்களுடன் மர்மநபர்கள் இரண்டு பேர் எப்படி நுழைந்தனர்?

நாடாளுமன்றத்தின் மீது தாக்குதல் நடந்த நினைவு நாளில், எவ்வாறு இப்படி ஒரு பாதுகாப்புக் குறைபாடு நடந்தது என்பதும் கேள்வியாக எழுந்துள்ளது. மர்மநபர்கள் இருவரும் காலணிக்குள் மறைத்து வைத்திருந்த புகைக் குண்டுகளை எடுத்து வீசியது, நாடாளுமன்ற கண்காணிப்பு கேமராக்களில் பதிவான காட்சிகள் மூலம் தெரிய வந்துள்ளது. திடீரென இரண்டு பேர் மக்களவைக்குள் குதித்ததைப் பார்த்த மக்களவை உறுப்பினர்கள், துரிதமாகச் செயல்பட்டு, அவர்கள் இருவரையும் மடக்கிப் பிடித்து அவைக் காவலர்களிடம் ஒப்படைத்ததால் பெரும் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டது. இல்லையென்றால், 2001 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் நடைபெற்ற சம்பவம் போன்று மீண்டும் நடைபெற்றிருக்க வாய்ப்புள்ளதாகவும் எம்.பி.க்கள் கூறியுள்ளனர்.

மக்களவையின் பார்வையாளர்கள் மாடத்தில் அமர்ந்திருந்த இருவரும், திடீரென மக்களவைக்குள் குதித்து, 'சர்வாதிகாரம் ஒழிக' என்று கோஷம் எழுப்பி, வண்ணத்தை உமிழும் கண்ணீர் புகைக் கருவியை கையில் வைத்திருந்தபடி, நாடாளுமன்றத்துக்குள் புகுந்தனர்.

நாடாளுமன்ற வளாகத்துக்குள் செல்ல நுழைவு வாயிலில் செல்வதற்கு முதற்கட்ட சோதனை நடைபெறும். அதன்பிறகே, வரவேற்பறையிலேயே பார்வையாளர்களை புகைப்படம் எடுக்கப்பட்டு தனி அடையாள அட்டை வழங்கப்படும். புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை இருக்கிறதா எனசோதிக்கப்படும். இவ்வாறு, நாடாளுமன்றத்துக்குள் ஒரு பார்வையாளர் நுழைய வேண்டும் என்றால் நான்கு கட்ட பாதுகாப்பு சோதனையைக் கடக்க வேண்டும். ஒவ்வொரு கட்டத்திலும் மெட்டல் டிடக்டர், மற்றும் ஸ்கேனர் சோதனை நடத்தப்படும்.

**இவ்வாறு நாடாளுமன்றத்தில் அவைக்குள் பார்வையாளர்களாக நுழைய நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் பரிந்துரைக் கடிதம் அவசியம், இந்தப் பரிசோதனைகளின்போது அந்தக் கடிதமும் சோதனை செய்யப்படும். இரண்டாவதாக நாடாளு மன்றத்தின் வரவேற்பறையில் பார்வையாளராக நுழைபவரின் பெயர், முகவரி, அடையாள அட்டை, எம்.பி.யின் பரிந்துரைக் கடிதம் அனைத்தும் சரிபார்க்கப்படும். பிறகு மக்களவை மற்றும் மாநிலங்களவைக்குள் நுழைவதற்கான இடத்தில் மூன்றாம் கட்டமாக சோதனை நடத்தப்பட்டு, நான்காம் கட்டமாக ஒவ்வொரு அவைக்குள்ளும் தனித்தனியாக சோதனை நடத்தப்படும். இவ்வாறு நான்கு கட்ட சோதனையைத் தாண்டித்தான் ஒருவர் நுழைய முடியும் என்பதால், தடை செய்யப்பட்ட பொருள்களுடன் இருவர், மக்களவைக்குள் எவ்வாறு நுழைந்தனர் என்பது இதுவரை பதில் கிடைக்காத கேள்வியாக உள்ளது. நாடாளுமன்றத்தில் பாதுகாப்புக் குறைபாடே இதற்குக் காரணம்.**

**கேட்டால், 'இது ஆபத்தான புகைக் குண்டு அல்ல' என்கிறார் சபாநாயகர் ஓம் பிர்லா. இந்தச் சொல்லைத் தான் பயன்படுத்தலாம், இதனைப் பயன்படுத்தக் கூடாது என்று பிரிக்கும் அளவுக்கு - வீசப்படத் தகுதியானது, வீசப்பட்ட தகுதியற்றது என்ற பகுப்பு குண்டுகளில் இருக்கிறதா? சபாநாயகர்தான் சொல்ல வேண்டும்.**

'சம்பவம் நடந்த போது பாதுகாவலர்கள் உள்ளே இல்லை' என்கிறார் சபாநாயகர். உள்ளே இல்லாதவர்களை பாதுகாவலர்களாக எப்படிச் சொல்ல முடியும்?

கோவையில் கார் சிலிண்டர் வெடித்தபோது, 'தமிழ்நாட்டை தீவிரவாதிகளின் புகலிடம்' என்று பரப்பிய பா.ஜ.க.வினர் இப்போது எங்கே போனார்கள்? கவர்னர் மாளிகை இருக்கும் சாலையில் பெட்ரோல் பாட்டில் வீசப்பட்டதை தேசிய முகமைதான் விசாரிக்க வேண்டும் என்றார்களே, நாடாளுமன்றத்தில் கண்ணீர் புகை வீசப்பட்டதை யார் விசாரிப்பது, ஐ.நா.சபையா? இண்டர்போலா? உலகநீதிமன்றமா?

**நாடாளுமன்ற வளாகத்துக்குள்ளேயே கண்ணீர் புகை வீச்சு என்பது ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு அவமானம் ஆகும். நாடாளு மன்றத்தின் பாதுகாப்பையே கோட்டை விட்டு விட்டார்கள். இதன் மூலமாக நாட்டின் பாதுகாப்பை கேள்விக்குள்ளாக்கி விட்டார்கள். நாடாளு மன்றத்தையே காக்க முடியாத பா.ஜ.க. ஆட்சிதான் நாட்டையும் நாட்டு மக்களையும் காக்கப் போகிறதா?**



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (14.12.2023) தலைமைச் செயலகத்தில், மிக்ஜாம் புயலால் ஏற்பட்ட கனமழையால் சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்ட ஒன்றிய குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களுடன் ஆலோசனை மேற்கொண்டார். இக்கூட்டத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### 'மிக்ஜாம்' புயலால் பாதிக்கப்பட்ட சிறு வணிகர்கள், வர்த்தகர்கள்

# கடனை திருப்பிச் செலுத்த கால அவகாசம் வழங்கிடுவீர்!

## ஒன்றிய நிதியமைச்சருக்கு - முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

**சென்னை, டிச. 16 -**

**"மிக்ஜாம்" புயலினால் பாதிக்கப்பட்ட சிறு வணிகர்கள், வர்த்தகர்கள் மற்றும் சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் கடன் தொகையினைத் திருப்பிச் செலுத்தும் கால அட்டவணையை மூன்று மாதங்களுக்குத் தளர்த்திடக் கோரி, ஒன்றிய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் அவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

தமிழ்நாட்டில் "மிக்ஜாம்" புயல் வெள்ளத்தால் சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் பாதிக்கப்பட்டோர் கடனைத் திருப்பிச் செலுத்துவதில் கால அவகாசம் வழங்கிடக் கோரி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் அவர்களுக்கு நேற்று முன்தினம் (14.12.2023) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், "மிக்ஜாம்" புயலினால் சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் ஆகிய நான்கு மாவட்டங்களில் வசிக்கும் 37 இலட்சம் குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதோடு, அவர்களது உடைமைகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், பாதிக்கப்பட்ட பகுதிகளில் மக்களின் இயல்புநிலையை மீட்டெடுக்க முடிந்த நிலையிலும், அவர்களின் வாழ்வாதாரத்தின் மீதான தாக்கம் இன்னும் தொடர்வதாகவும், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சிறு வணிகர்கள், வர்த்தகர்கள் மற்றும் சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் இன்னும் தங்கள் வழக்கமான பொருளாதார நடவடிக்கைகளுக்கு திரும்பவில்லை என்றும் தெரிவித்துள்ளார். புயல் பாதிப்பிற்குள்ளான பலர் / வணிக நிறுவனங்கள் பல்வேறு நோக்கங்களுக்காக வங்கிகளில் கடன்களைப் பெற்றுள்ள நிலையில், தங்களது நிலுவைத் தொகையைத் திருப்பிச் செலுத்த முடியாமல் தற்போது தவிக்கின்றனர் என்றும், இந்த நெருக்கடியில் இருந்து அவர்கள் மீண்டு வரும் வரை கடனைத் திருப்பிச் செலுத்தும் கால அட்டவணைகளைத் தளர்த்திட வேண்டிய அவசரத் தேவை உள்ளதாகக் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், அனைத்து வணிக வங்கிகள், கூட்டுறவு வங்கிகள், அகில இந்திய நிதி நிறுவனங்கள் மற்றும் வங்கி சாரா நிதி நிறுவனங்கள் வழங்கியுள்ள அனைத்து காலக் கடன்களுக்கும், 2023 டிசம்பர் 1 முதல் 2024 பிப்ரவரி 29 வரை தவணைத் தொகையைச் செலுத்துவதிலிருந்து விலக்கு அளித்து, கடன் தவணையையும், வட்டியையும் செலுத்துவதில் மூன்று மாதங்கள் ஒத்திவைக்க அனுமதிக்கப்படலாம் எனத் தெரிவித்துள்ளார்.

எனவே, பிரச்சினையின் அவசரத்தை கருத்தில் கொண்டு, இந்த விஷயத்தில் ஒன்றிய நிதியமைச்சர் அவர்கள் தனிப்பட்ட முறையில் தலையிட்டு, பாதிக்கப்பட்ட மக்களின் திருப்பிச் செலுத்தும் சுமையைக் குறைக்கும் வகையில், தேவையான உத்தரவுகளை உடனடியாகப் பிறப்பிக்குமாறு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

### இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்ட

# 45 மீனவர்களை உடனே விடுவிக்க நடவடிக்கை எடுத்திடுக!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் - ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சரிடம் வலியுறுத்தல்!

**சென்னை, டிச. 16 -**

**இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு, இலங்கை வசமுள்ள 45 மீனவர்கள் மற்றும் 138 மீன்பிடிப் படகுகளை உடனடியாக விடுவித்திட உரிய தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தி, ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

இலங்கைக் கடற்படையினரால் 13.12.2023 அன்று 6 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், அவர்களை உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்கக் கோரி ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (14.12.2023) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், புதுக்கோட்டை மாவட்டம், ஜெகதாப்பட்டினம் மீன்பிடித் துறைமுகத்தைச் சேர்ந்த 6 மீனவர்கள், INDTN08MM26 என்ற பதிவு எண் கொண்ட இயந்திரப் படகில் மீன்பிடிக்கச் சென்றிருந்த நிலையில், அவர்களது மீன்பிடிப் படகுடன் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், கடந்த ஒரு வாரத்தில் இலங்கைக் கடற்படையினரால் மீனவர்கள் கைது செய்யப்படுவது இது மூன்றாவது சம்பவம் என கவலைபடத் தெரிவித்துள்ளார்.

இலங்கைக் கடற்படையினர் தொடர்ந்து நமது மீனவர்களின் பாரம்பரிய உரிமைகளை மீறும் வகையில் இதுபோன்று கைது நடவடிக்கையில் ஈடுபடுவதால், மீனவர்களின் வாழ்வாதாரம் பெருமளவில் பாதிக்கப்படுவதுடன், மீனவர்களின் வாழ்வில் பெருத்த அச்சத்தையும், பீதியையும் ஏற்படுத்துவதாகத் தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், இந்த ஆறு மீனவர்கள் தவிர்த்து, ஏற்கெனவே 39 மீனவர்களும், 137 படகுகளும் இலங்கைவசம் காவலில் உள்ளதாக தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்கள் இதில் உடனடியாகத் தலையிட்டு, இலங்கைவசமுள்ள 45 மீனவர்கள் மற்றும் 138 மீன்பிடிப் படகுகளை உடனடியாக விடுவித்திடத் தேவையான தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

### நாடாளுமன்றத்தில் பாதுகாப்புக் குளறுபடி!

# ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா பதவி விலக வலியுறுத்தல்!

## கனிமொழி கருணாநிதி உள்ளிட்ட 15 எம்.பி.க்கள் நீக்கம்! இரு அவைகளும் ஒத்திவைப்பு!

*புதுடெல்லி, டிச. 16-*

*நாடாளுமன்ற பாதுகாப்பு குளறுபடி விவகாரத்தில், ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா பதவி விலக வலியுறுத்தி காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்.பி.க்கள் முழக்கமிட்டனர். இதனால் நாடாளுமன்ற இரு அவைகளும் பிற்பகல் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.*

*நாடாளுமன்றத்திற்குள் அத்துமீறி நுழைந்த 2 பேர் புகைக் குண்டுகளை வீசிய சம்பவம் நாடு முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. இந்த விவகாரம் குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்க வேண்டும் என்று காங்கிரஸ், தி.மு.க உள்ளிட்ட கட்சிகள் ஒத்தி வைப்பு நோட்டீஸ் அளித்து இருந்தனர். இந்நிலையில் நேற்று காலை மக்களவை கூடியதும் நாடாளுமன்ற பாதுகாப்பு குளறுபடி விவகாரத்தில் உள்துறை அமைச்சர் அமித்ஷா பதிலளிக்க வேண்டும் என்றும், அவர் பதவி விலக வேண்டும் என்றும் எதிர்க்கட்சிகள் வலியுறுத்தின. ஆனால் இந்த விவகாரத்தில் பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத்சிங் விளக்கம் அளித்தார். இதனை ஏற்க மறுத்த எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஒன்றிய அமைச்சர் அமித்ஷா, விளக்கம் அளிக்க வலியுறுத்தி தொடர்ந்து முழக்கங்களை எழுப்பினர். இதனையடுத்து மக்களவையை பிற்பகல் 2 மணி வரை சபாநாயகர் ஓம் பிர்லா ஒத்தி வைத்தார்.*

*மாநிலங்களவையிலும் நாடாளுமன்ற பாதுகாப்பு விவகாரத்தை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எழுப்பினர். பாதுகாப்பு குளறுபடி குறித்து உடனடியாக விவாதம் நடத்த வேண்டும் என்றும் எதிர்க்கட்சிகள் வலியுறுத்தின. ஆனால் இதற்கு அவைத்தலைவர் அனுமதி மறுத்ததால் அவையின் மையப்பகுதிக்குச் சென்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தொடர்ந்து முழக்கங்களை எழுப்பினர். இதனால் நண்பகல் 12 மணி வரை அவை ஒத்திவைக்கப்பட்டது. அவை 12 மணிக்கு கூடிய போதும், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தங்கள் கோரிக்கையை வலியுறுத்தி முழக்கம் எழுப்பியதால், பிற்பகல் 2 மணிவரை அவை ஒத்திவைக்கப்பட்டது.*



*இதையடுத்து மக்களவை 2 மணிக்கு பிறகு மீண்டும் கூடியது. அப்போதும் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் தொடர்ந்து முழக்கமிட்டனர். இதனால் கனிமொழி கருணாநிதி, எஸ்.ஆர்.பார்த்திபன் மற்றும் ஜோதிமணி உட்பட காங்கிரஸ் எம்.பி.க்கள் 5 பேர் மக்களவையில் இருந்து சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளனர். ரம்யா ஹரிதாஸ், டி.என்.பிரதாபன், ஹிபி இடன் ஆகியோரை மக்களவையில் இருந்து நடப்பு கூட்டத்தொடர் முழுவதும் சஸ்பெண்ட் செய்து சபாநாயகர் ஓம்பிர்லா உத்தரவிட்டார். இதே போல் மாநிலங்களவையில் திரிணாமுல் காங்கிரஸ் எம்பி டெரிக் ஓபிரையன், அவையின் மைய பகுதிக்கு வந்து தொடர்ந்து முழக்கமிட்டார். அவரை நடப்பு குளிர்கால கூட்டத்தொடர் முழுவதிலும் இருந்து சஸ்பெண்ட் செய்து துணை ஜனாதிபதி ஜெகதீப் தன்கர் உத்தரவிட்டார். எதிர்க்கட்சிகளின் தொடர் அமளியால் நாடாளுமன்றம் முடங்கியது.*

*இதனிடையே, நாடாளுமன்ற பாதுகாப்பு குறைபாடு குறித்து இருஅவைகளிலும் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் தொடர் முழக்கங்கள் எழுப்பிய நிலையில், இது குறித்து விளக்கம் அளிக்க பிரதமர்நரேந்திரமோடியோ ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவோ நாடாளுமன்றத்திற்கு வரவில்லை.*



சென்னை, தலைமைச் செயலகத்தில், நேற்று முன்தினம் (14.12.2023) பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, நெடுஞ்சாலைத்துறையில், பணியின்போது மறைந்த ஈப்பு ஒட்டுநர், சாலைப் பணியாளர்கள் மற்றும் அலுவலக உதவியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில், 10 கோட்டங்களில் பணி நியமனத்திற்கு தெரிவு செய்யப்பட்ட, 2 இளநிலை உதவியாளர்கள் மற்றும் 8 அலுவலக உதவியாளர்கள் பணியிடங்களுக்கான பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்வில் நெடுஞ்சாலைத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், நெடுஞ்சாலைகள் துறை தலைமைப் பொறியாளர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

## 'திராவிட மாடல்' ஆட்சியின் மற்றுமொரு மைல் கல்லாக

# "மக்களுடன் முதல்வர்" எனும் புதிய திட்டம்!

## கோவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் டிச. 18 அன்று தொடங்கி வைக்கிறார்!

**சென்னை, டிச. 16 -**

**தமிழ்நாட்டில் அரசின் சேவைகள் பொதுமக்களை விரைவாகவும், எளிதாகவும் சென்று சேர்ந்திட வழிவகுக்கும் "மக்களுடன் முதல்வர்" என்ற புதிய திட்டம் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் 18-12-2023 அன்று கோயம்புத்தூரில் தொடங்கி வைக்கப்படுகிறது.**

தமிழ்நாட்டில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வகுத்துத் தந்த சமூக நீதிப் பாதையில், ஏழையெளிய, நடுத்தர மக்கள், விவசாயிகள், மாணவர்கள் என அனைத்துத் தரப்பினரும் பயன்பெறும் வகையில், பல்வேறு சிறப்பான திட்டங்களைத் தீட்டி, இந்தியத் துணைக் கண்டமே போற்றும் வகையில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அரசின் சேவைகள் பொதுமக்களுக்கு எளிதாகவும், விரைவாகவும் கிடைத்திட பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

### 100 நாட்களில் தீர்வு: வரலாற்றுச் சாதனை!

அந்தவகையில், தாம் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், தமது தேர்தல் பரப்புரையின் போது பெறப்பட்ட மனுக்களின் மீது தீர்வு காண, "உங்கள் தொகுதியில் முதலமைச்சர்" என்ற துறையை உருவாக்கி, அனைத்து மனுக்களுக்கும் 100 நாட்களில் தீர்வு கண்டு வரலாற்று சாதனை படைத்தார்கள். அதன் தொடர்ச்சியாக, பொதுமக்களின் கோரிக்கைகளைத் திறம்பட கையாண்டு, அவற்றை நிறைவேற்றிட ஏதுவாக, "முதல்வரின் முகவரித் துறை" என்ற தனித்துறையை உருவாக்க ஆணையிட்டார்கள். இதன்மூலம் கடந்த இரண்டரை ஆண்டுகளில் சுமார் 49 இலட்சம் மனுக்கள் பெறப்பட்டு, அவற்றிற்கு உரிய முறையில் தீர்வு காணப்பட்டு வருகிறது.

அதோடு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேரடியாக மாவட்டங்களுக்கு ஆய்வுப் பயணம் மேற்கொண்டு, "கள ஆய்வில் முதலமைச்சர்" என்ற முன்னெடுப்பின் கீழ், மாவட்டங்களில் ஆய்வுக் கூட்டங்கள் நடத்தி, கள ஆய்வுகள் மேற்கொண்டு, அரசின் நலத்திட்டங்கள் மற்றும் சேவைகள் குறிப்பிட்ட காலத்திற்குள் பொது மக்களுக்குக் கிடைப்பதை உறுதி செய்திட நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார்கள்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இந்த முன்னெடுப்பின் நீட்சியாக, அரசுத் துறைகளை அன்றாடம் அணுகும் பொதுமக்களுக்கு, அரசு அலுவலர்கள் வழங்கும் சேவைகளை மேலும் செம்மைப்படுத்தி, அரசின் சேவைகள் விரைவாகவும் எளிதாகவும் அவர்களைச் சென்றுசேரும் வகையிலும், நிர்வாகத்தில் வெளிப்படைத் தன்மையை ஏற்படுத்திடவும், திராவிட மாடல் ஆட்சியின் மற்றுமொரு மைல்கல்லாக "மக்களுடன் முதல்வர்" என்ற புதிய திட்டம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் 18-12-2023 அன்று கோயம்புத்தூரில் தொடங்கி வைக்கப்படவுள்ளது.

### அனைத்துத் துறைகள் சார்பில் சிறப்பு முகாம்கள்!

"மக்களுடன் முதல்வர்" என்ற இத்திட்டத்தில், பொதுமக்கள் அதிகமாக அணுகும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நகராட்சி நிர்வாகத் துறை, ஊரக வளர்ச்சித் துறை, ஆதிதிராவிடர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, சமூக நலத் துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, கூட்டுறவுத்துறை, மகளிர் மேம்பாட்டு கழகம், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, எரிசக்தி துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சிறு, குறு, நடுத்தரத் தொழில்கள் போன்ற அரசுத் துறைகள் சார்ந்த கோரிக்கைகளைப் பெறுவதற்கு முதலமைச்சர் அவர்களின் நேரடிக் கண்காணிப்பில், அனைத்து நகர்ப்புற, மற்றும் கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளில் வார்டு மற்றும் கிராம ஊராட்சி அளவில், அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பு முகாம்கள் நடத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

- **முதற்கட்டமாக வரும் 18-12-2023 ஆம் தேதி முதல் 06-01-2024 வரை அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் நகரப்புறங்களை ஒட்டியுள்ள கிராம ஊராட்சிகளிலும் 1745 முகாம்கள் நடத்தப்படும். இந்த முகாம்கள் புயலால் பாதிக்கப்பட்ட 4 மாவட்டங்கள் நீங்கலாக, ஏனைய மாவட்டங்களில் நடத்தப்படும்.**
- **சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப் பணிகள் முடிவுற்றவுடன், 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் வாரத்திலிருந்து 31-1-2024 வரை "மக்களுடன் முதல்வர்" திட்டத்திற் கான சிறப்பு முகாம்கள் நடத்தப்படும்.**
- **முதற்கட்டமாக, நகர்ப்புறங்களில் நடத்தப்படும் முகாம்கள் முடிவுற்ற பின்னர், அடுத்த கட்டமாக, அனைத்து மாவட்டங்களிலும் உள்ள ஊரகப் பகுதிகளில் இந்த முகாம்கள் நடத்த ஆவன செய்யப்படும்.**

### 30 தினங்களுக்குள் மனுக்கள் பரிசீலனை!

- **இந்த முகாம்களில் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் அனைவரும் ஒரே குடையின்கீழ் மக்களின் கோரிக்கைகளைப் பெற்று பதிவு செய்வார்கள். முகாம்களில் பெறப்படும் மனுக்கள் அனைத்தும், சம்பந்தப்பட்ட துறைகளால் 30 தினங்களுக்குள் உரிய முறையில் பரிசீலனை செய்யப்பட்டு, தகுதியின் அடிப்படையில் உரிய சேவைகள் மக்களுக்கு வழங்கப்படும்.**
- **முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கோயம்புத்தூரில் இத்திட்டத்தினை துவக்கி வைக்கும் அதே நேரத்தில், அமைச்சர் பெருமக்கள் அவர்களுடைய மாவட்டங்களிலும், பொறுப்பு அமைச்சர்கள் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட மாவட்டங்களிலும் இம்முகாம்களை தொடங்கி வைக்கவுள்ளனர். இம்முகாம்களில், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.**

பொதுமக்கள் இம்முகாம்களை நல்ல முறையில் பயன்படுத்தி உரிய சேவைகளைப் பெற்றுக்கொள்ள தெரிவித்தும், துறை அலுவலர்கள் கோரிக்கைகளை அக்கறையோடு பரிசீலித்து அவர்களுக்கு சட்டப்பூர்வமாக கிடைக்க வேண்டிய உதவிகளை எவ்வித தாமதமும் இன்றி, விரைவாகவும் எளிதாகவும் உரிய முறையில் தீர்வு காண முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

---

## புயல் பாதிப்பு:

# மக்களை சிறந்த முறையில் பாதுகாத்த தமிழ்நாடு அரசு!

## ஆய்வு மேற்கொண்ட ஒன்றியக் குழுவின் தலைவர் குணால் சத்யாத்ரி பாராட்டு!

சென்னை, டிச. 16 -

தமிழ்நாடு அரசு "மிக்ஜாம்" புயலால் ஏற்பட்ட பெருமழையினை எதிர்கொண்டு, மேற்கொண்ட நிவாரணப் பணிகள் அனைத்தும் மிகுந்த பாராட்டுக்குரியவை என்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுடன் நேற்று முன்தினம் (14.12.2023) தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் ஒன்றியக் குழுவின் தலைவர் குணால் சத்யாத்ரி அவர்கள் தெரிவித்தார்.

இது குறித்து அவர் தெரிவித்ததாவது:-

மிக்ஜாம் புயல் ஏற்படுத்திய பெருமழையால் பாதிக்கப்பட்ட சென்னை உட்பட 4 மாவட்டங்களையும் பார்வையிட்டு ஆய்வு செய்துள்ளோம். ஆய்வுப் பணிகள் மேற்கொண்டதில் எங்களுக்கு மனநிறைவு ஏற்பட்டுள்ளது. இந்திய வானிலை ஆய்வு மையம் புயல் எச்சரிக்கையை முன்கூட்டியே வெளியிட்டதன் அடிப்படையில், தமிழ்நாடு அரசு தகுந்த அறிவியல்பூர்வமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு, செம்பரம்பாக்கம் ஏரியை முன்கூட்டியே திறந்துவிட்டதனால் பெருமளவிலான வெள்ளச்சேதம் தவிர்க்கப்பட்டுள்ளது.



இதுபோன்ற புயல் 50 அல்லது 100 ஆண்டுகளுக்கு ஒருமுறை வீசக்கூடியது. தற்போது வீசிய புயல் சென்னைக்கு அருகே கடலோரத்தில் நிலையாக நின்று பெருமழையைத் தந்து, தமிழ்நாட்டின் கடற்கரையையொட்டி நகர்ந்து ஆந்திரா மாநிலத்திற்குச் சென்றுவிட்டது. பெருமழை காரணமாக தாழ்வான பகுதிகளில் தேங்கிய வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை பாதுகாப்பான இடத்திற்கு அழைத்துச் சென்று, அவர்களை பாதுகாத்து, உயிரிழப்புகள் அதிகம் ஏற்படாமல் மாநில அரசு தடுத்துள்ளது. தேசிய பேரிடர் மீட்புக் குழு, மாநில பேரிடர் மீட்புக் குழு, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையினர் விரைவாகச் செயல்பட்டு நிவாரணப் பணிகளை சிறப்பாக மேற்கொண்டுள்ளனர். பெருமழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தங்குமிடம், உணவு, மருந்துப் பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை வழங்கி சிறந்த முறையில் அரசு பாதுகாத்துள்ளது.

தமிழ்நாடு அரசு எங்களுக்கு வெள்ளச் சேதம் குறித்த விவரங்களை அளித்துள்ளது. எங்கள் குழுவும் பல்வேறு இடங்களை பார்வையிட்டு, உண்மை நிலவரங்களை ஆய்வு செய்து விவரங்களைத் திரட்டியுள்ளது. அவற்றின் அடிப்படையில் குழு தயாரிக்கும் ஆய்வு அறிக்கை ஒன்றிய அரசுக்கும், ஒன்றிய உள்துறை அமைச்சகத்திற்கும் அளித்து நிவாரண உதவிகள் விரைவில் கிடைக்க அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும்.

இவ்வாறு ஒன்றியக் குழுவின் தலைவர் குணால் சத்யாத்ரி தெரிவித்தார்.

---

### கனிமொழி கருணாநிதி உள்ளிட்ட 15 எம்.பி.க்களின் இடைநீக்கம் கண்டனத்திற்குரியது!

# நாடாளுமன்ற ஜனநாயகத்தை மலினப்படுத்துவதாகும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, டிச.16 -

மக்களவை கழகக் குழு துணைத் தலைவர் கனிமொழி கருணாநிதி உள்ளிட்ட 15 எம்.பி.க்களின் இடைநீக்கம் மக்களாட்சிக்கு எதிரானது; நாடாளுமன்ற ஜனநாயகத்தை மலினப்படுத்துவதாகும் என்றும், பா.ஜ.க.வின் சகிப்புத் தன்மையற்ற போக்கு கண்டனத்துக்குரியது என்றும் குறிப்பிட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை இடைநீக்கம் செய்திருப்பதை கண்டித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவு வருமாறு:-

**தி.மு.க. மக்களவை உறுப்பினர் கனிமொழி கருணாநிதி உள்ளிட்ட 15 எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை இடைநீக்கம் செய்திருப்பது மக்களாட்சிக்கு எதிரானதும், நாடாளுமன்ற ஜனநாயகத்தை மலினப்படுத்துவதும் ஆகும்.**

**பா.ஜ.க. தலைமையிலான ஒன்றிய அரசின் இந்த சகிப்புத்தன்மையற்ற போக்கு கண்டனத்துக்குரியது.**

**நாடாளுமன்ற உறுப்பினர்களின் கருத்துரிமையை நசுக்குவதுதான் நாடாளுமன்றத்தின் புதிய நடைமுறையாகி வருகிறதா? மக்களாட்சியின் உயரிய கோயிலாகிய நாடாளுமன்ற அவையில் ஏற்பட்ட மிகப் பெரும் பாதுகாப்பு மீறல் குறித்துக் கேள்வி கேட்பதற்காக மக்கள் பிரதிநிதிகள் தண்டிக்கப்படுவது ஏன்?**

**15 நாடாளுமன்ற உறுப்பினர்களின் இடைநீக்கத்தை உடனடியாகத் திரும்பப் பெறவேண்டும் என்று கோருகிறோம். நாடாளுமன்றம் என்பது விவாதத்துக்கான களமாக இருக்க வேண்டுமே ஒழிய, எதிர்க்கட்சிகளின் குரலை அடக்குவதற்காக இருப்பது அறவே கூடாது.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.



சேலத்தில் டிசம்பர் 24-ல் நடைபெற உள்ள இளைஞர் அணி இரண்டாவது மாநில மாநாட்டிற்கான நிதியாக நாமக்கல் மேற்கு மாவட்ட இளைஞர் அணி சார்பாக ரூபாய் 12 லட்சத்தை, கழக இளைஞர் அணி செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடத்தில் மாவட்ட கழக செயலாளர் எஸ்.எம்.மதுராசெந்தில் தலைமையில், மாவட்ட அமைப்பாளர் பாலாஜி, துணை அமைப்பாளர்கள் சுந்தர், நவலடிராஜா, கதிரவன், மல்லை ஜெகதீஷ், முரளி, கார்த்திக் ஆகியோர் வழங்கினர்.

# அன்று கண்டதும்; இன்று காண்பதும் அதே நிலா !

## கலைஞர் கடிதம்!... முதல் பக்கத் தொடர்ச்சி

ஐந்நூறு கிளைகள். அந்தக் கிளைகளுக்கும் மத்திய கழகத்திற்கும் தொடர்பு அறுந்துதான் போயிருக்கிறது. ஒரு திட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென்றால் - அந்தத் திட்டம் தீட்டப்பட்ட பிறகு . . மத்தியக் கழகத்திலிருந்து மாவட்டக் கழகத்திற்குச் சென்று, மாவட்டக் கழகம், கிளைக் கழகங்களுக்கு அறிவித்து கிளைக்கழகம், அளிக்கப்பட்ட கட்டளையை நிறைவேற்ற வேண்டுமென்று ஏற்பாடு இருக்கிறது. ஆனால் முறைப்படி நடக்கவில்லை. தலைமைக் கழகம் ஒரு சங்கிலியின் பதக்கமாகவும் கிளைகள் முத்துக்களாகவும் கோக்கப்படவில்லை. இந்தக் குறையை விரைவில் களைய வேண்டும். இந்த இணைப்பு உறுதியாக இருந்தால்தான் கிளைக் கழகத்தின் சந்தேகங்கள் - சச்சரவுகள் - நடவடிக்கைகள் இவைகளை நல்ல முறையில் சீர்படுத்தி இயக்கத்தைச் செழிப்பாக்க முடியும். பிரச்சாரக் குழு மட்டும் வேலை செய்து பயன் இல்லவே இல்லை. சென்ற ஆண்டு போட்ட திட்டங்கள் அனைத்தும் செயல்முறைக்கு வந்தாக வேண்டும்.

நாம் வளர்ந்திருக்கிறோம். வளர்ந்து கொண்டே போகிறோம். அதற்கும் ஒரு கட்டுப்பாடு - ஒழுங்கு - நியதி வேண்டுமென்பதுதான் பிரச்சினை.

ஒருவனுக்கு லட்சம் லட்சமாய் பணம் வருகிறது. அவனும் கணக்கு வழக்கின்றி செலவு செய்கிறான். செலவுக்கு கட்டுப்பாடுமில்லை - கணக்குமில்லை. கடைசியாக ஒருநாள் அவன் சம்பாதித்தது எவ்வளவு என்று கணக்குப் போட்டு விஷயம் புரியாமல் கலங்கித் தவிக்கிறான். அந்தப் பணக்காரன் நிலைமை இயக்கத்திற்கு வரக் கூடாது, வர விடக் கூடாது.

கல்லடியும் சொல்லடியும் பட்ட காலத்திலே கரையாத இயக்கம் - பணக்காரர்களின் செல்வாக்கென்ற ஈட்டிகள் எறியப்பட்ட நேரத்திலே இறந்து போகாத இயக்கம் - மடாதிபதிகளின் எதிர்ப்பு, மகந்துகள் ஜீயர்களின் கொதிப்பு இவைகளால் மாண்டு போகாத இயக்கம் - பதவியும் பட்டமுமே தேவை என்பவர்களின் பாசக் கயிற்றிலிருந்து விடுபட்ட இயக்கம் - சொந்த வாழ்வும் சுயநலமுமே பெரிதென்போரின் பிடியிலிருந்து தப்பிய இயக்கம் - கொள்கைக்காக வாழ்ந்த நாகை மணியை, மாயவரம் நடராசனை, ஆரூர் இராமனை, அழகிரிசாமியை அணைத்திருந்த இயக்கம் - மொழிக்காக உயிர்விட்ட தாளமுத்து நடராசன்களைக் கொண்டிருந்த இயக்கம் - கொள்கைக்காக மரத்திலே பிணமாக ஊஞ்சலாட்டப்பட்ட உடையார் பாளையம் வேலாயுதங்களை உள்ளடக்கிய இயக்கம் - மதுரை மாநாட்டுத் தீயைக் கண்டு மனங்கலங்காத இயக்கம் -குடந்தைத் தெருவினிலே குருதி வெள்ளத்தைக் கண்டு குலை நடுங்காத இயக்கம் - இராமகாவியம் இழுக்குடையது என்பதை எடுத்துக்காட்டி பாரதியார்களை, சேதுப்பிள்ளைகளை சொற்போரிலே வெற்றி கண்ட இயக்கம் - ‘ஆறிலும் சாவுதான் நூறிலும் சாவுதான், ஆனது ஆகட்டுமே’ என்று பாடி வரும் ஆயிரமாயிரம் பட்டாளத் தம்பிகளைப் பெற்றுள்ள இயக்கம் - தம்பிகளின் நெஞ்சைத் தட்டிப் பார்த்து “உறுதியானதுதானா இது!” என்று உணர்ந்து அறப்போருக்கு உரிய காலம் பார்த்திருக்கும் உலக அறிஞர்களில் ஒருவராம் அண்ணாவைப் பெற்றிருக்கும் இயக்கம் - குள்ள நரிக் கூட்டத்தின் குடல் கிழிக்கும் கூற்றம் - குமுறும் எரிமலை புதுவைக் கவிஞர் பாரதிதாசனைப் பெற்றுள்ள இயக்கம் - ஆரியம் ஒரு மாயை, அது பல உருவில் நடமாடும் என்பது கண்டு இலக்கியத் துறையிலே - நாடகத் துறையிலே - கலைத் துறைகளிலே - ஆரியத்தின் கைவரிசையை எதிர்க்கப் பலப்பல அணுகுண்டுகளை நடமாட விட்டிருக்கும் இயக்கம் - இத்துணை மகத்தான இயக்கம் நிலவுபோல வளர்வதும், தேய்வதும் பின் வளர்வதுமாயுள்ளது. நிச்சயமாக நமக்குத் தெரியும் கழகத்திலே நான் மேலே குறிப்பிட்ட அமைப்பு முறைகள் சீர்திருத்தப்படா விட்டாலுங்கூட கழகம் அழிந்து விடாது என்று. ஆனாலும் சந்திரனைப் போல தேயும். பிறகு வளரும். ஆனால் சந்திரனைப் போல அழியாமலே இருக்கும். நம்முடைய ஆசையெல்லாம் இயக்கம், அழியாமலுமிருந்து அதோடு வளர்வதும் தேய்வதுமின்றி எப்போதும் வளர்வது என்பதாகவே இருக்க வேண்டும் என்பதுதான். அதற்காகத்தான் அழுத்தந்திருத்தமாகக் கூற வேண்டியிருக்கிறது, அமைப்பு முறை தேவையென்று. அந்தத் தேவையை மத்தியக் கழகத்திலி ருந்துதான் பூர்த்தி செய்ய வேண்டுமென்பதல்ல. மாவட்ட, கிளைக் கழகங்கள் தங்கள் சொந்த முயற்சியிலேயே அமைப்பு கண்டு மாவட்டத்தை ஒழுங்குபடுத்திக் கொண்டு மத்திய கழகத்தை தங்களோடு இணைத்து செயல் புரியச் செய்ய வேண்டும். விழுதுகள் இருந்தால் தான் ஆலமரத்திற்கு அழகு. இது கழகத் தொண்டர்கள் - செயலாளர்கள் அறியாததல்ல.

நாட்டு நிலைமை மிக மிக நெருக்கடியான கட்டத்தில் இருக்கிறது. இந்த நேரத்தில் நாடு நம்மை எதிர்பார்த்து நிற்கிறது. அவர்கள் எதிர்பார்ப்பது நம்மிடமிருந்துதான். நமது கொள்கை அவர்கட்கு தேளாயிருந்த காலம்போய் தேனாக மாறிவிட்டது இப்போது. இந்த நல்ல நேரத்தை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். பயன்படுத்துவது என்றால் போலிப் பிரச்சாரம் செய்து தேர்தலிலே நாற்காலி பிடிப்பது என்பதல்ல, பொருள். நம்மிடையே நல்லெண்ணம் அரும்பியிருக்கும் இவ்வேளையில் மக்களுக்குள்ள கஷ்டங்களை - நாட்டுக்குள் படையெடுக்கும் நானாவித ஆபத்துக்களை முறியடிப்பதற்கு நம்முடைய உயிரைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அர்ப்பணிக்க வேண்டும் என்ற அர்த்தத்தில்தான் கூறுகிறேன்.

இந்தித் திணிப்பு எதிர்ப்பிலே வெற்றி பெற்று விட்டோம். வாகை மாலை சூடி விழாக்களும் நடத்தி விட்டோம். எலும்புகளை முறித்துக் கொடுத்து - நரம்புகளை அறுத்துக் கொடுத்து - குருதியைக் கொட்டிக் கொடுத்து இத்தனைக்கும் அசையாத நிலை ஆளவந்தாருக்கு இருக்கிறது என்பது கண்டு, இறுதியாக கோவை முத்தமிழ் மாநாட்டிலே அபாய அறிவிப்பு சங்கம் முழங்கி, அதன் பிறகு ஆளவந்தவர் விழித்துப் பார்த்து, மொழிக்கு வந்த கொடுவாளைத் தடுத்து விட்டனர். இந்த வெற்றியைக் கொண்டாடும் நேரத்திலேயே நெஞ்சு கொதிக்கும் நெருப்புச் செய்தியொன்று நம்மை நெருங்கிற்று.

ஆம், அதுதான் அல்லாடியாரின் ஆனந்தத் தாண்டவம் - அக்கிரகாரத்தின் வெற்றி முரசம் - திராவிடத்தின் முன்னாள் பழம்பெருந்தலைவர்கள், உரிமைப் போர்த் தளபதிகள் தியாகராயர், டாக்டர் நாயர், பனகல் அரசர், டாக்டர் நடேசன், போன்ற பல தலைவர்கள் ஒன்று சேர்ந்து உண்டாக்கிய வகுப்புவாரி பிரதிநிதித்துவ முறை (கம்யூனல் ஜி.ஓ.) யைக் குழியில் தள்ளிவிட்டு பார்ப்பனீயம் பாடுகின்ற பள்ளுப்பாட்டைத்தான், தோழர்களே! குறிப்பிடுகிறேன். முப்பது ஆண்டுகளாக அமுலிலிருந்து வரும் வகுப்புவாரி முறை அடியோடு சாய்கிறது. சட்டம் கம்யூனல் ஜி.ஓ.வுக்கு மாறானதாயிருக்கிறதாம். அதற்காக சமூக நீதியை சாய்த்து விட வேண்டுமாம். சட்டத்தை இயற்றுபவர்கள் மக்கள், மக்கள் வாழ வகுத்தது சட்டம். கம்யூனல் ஜி.ஓ.வுக்கு மாறுதலாக சட்டம் இருந்தால் சட்டத்தைச் சரிப்படுத்த வேண்டியது முறையா அல்லது ஒரு பெரிய சமுதாயத்தின் உரிமையை உடைத்து நொறுக்கி உள்ளம் எரியச் செய்வது முறையா என்றுதான் நாம் கேட்கிறோம்.

1920இல் எஸ்.எஸ்.எல்.சி. பரிட்சைக்கு சென்ற மாணவர்களின் தொகை இருபதாயிரம். இன்று 1950ல் அறுபத்தெட்டாயிரம். இப்படி வளர்ந்து வந்த திராவிடரின் கல்வி உயர்வைக் கருவறுக்க சட்டத்தை வாளாக்குகிறார்கள். சட்டம் செய்தவர்கள் ஐந்து பேர். அதில் மூன்று பேர் தென்னாட்டு நிலை தெரியாத வட நாட்டவர். இருவர் தென்னாட்டவர். அதில் ஒருவர் டி.டி. கிருஷ்ணமாச்சாரியார், மற்றவர் அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர். எங்கிருந்து நீதி கிடைக்கும் இந்த நிரபராதித் திராவிடருக்கு!. எங்கிருந்து உரிமை கிடைக்கும் உளுத்துப்போன சமுதாயத்துக்கு!..... சமூகநீதி தேவையென்றால் பரந்த நோக்கம் பேசுகிறார்கள். தகுதி, திறமையென்கிறார்கள். இந்தத் தகுதியும் திறமையும் சமுதாயப் பிரச்சினை வரும்போது காட்டப்படுகிறதா? கல்விச் சாலைக்குச் செல்ல தகுதி திறமை என்று கர்ஜிக்கிற கனவான்களைக் கேட்கிறேன் - காலையில் எழுந்து ஸ்னானம், நேமம், நிஷ்டை, விரதம், அளவில்லாத ஆண்டவன் பக்தி, பழுத்த ஆஸ்திகம் இத்தனை திருக்குணங்களும் அமைந்த திராவிடன் ஒருவன், ஆலயத்து சென்று ஆண்டவனைத் தொட்டு அர்ச்சிக்க அபிஷேகிக்க முடியாதே. அதே நேரத்தில் இரவெல்லாம் இன்பவல்லியோடு கூடிக் கிடந்து வெற்றிலை காய்ந்த வாயுடனே ஆண்டவனைத் தொட்டுக் குளிப்பாட்டி, உணவூட்ட ஒரு பெரு வியாதி பிடித்த பார்ப்பனருக்குக் கூட உரிமை இருக்கிறதே - இதில் எங்கே தகுதி, திறமை? யாரிடமிருக்கிறது தகுதி..... ஆனால் யார் நுழைய முடிகிறது கோயிலில். இவைகளை ஒழித்துக் கட்டி விட்டு, உயர்ந்தோர் எனப் பேசும் ஆணவத்தை அகற்றி விட்டு பிறகு கம்யூனல் ஜி.ஓ. தேவையற்றது என்றால்கூட அதில் அர்த்தமுண்டு. எப்படியோ அவர்கள் வெற்றி பெற்று விட்டார்கள்.

நாம் முன்பு கூறியபோது நையாண்டி பேசிய வர்கள் இன்று நம்மோடு சேர்ந்து ‘அந்தோ! அநீதி!’ என அலறுகிறார்கள். சென்னை அரசாங்கம் சுப்ரீம் கோர்ட்டுக்குச் சென்று விட்டது நீதி கேட்க! அதுவும் நம் முயற்சியால்தான், கிளர்ச்சியால்தான் முடிந்தது என்பதை நினைத்துப் பெருமையடைகிறோம். உயர் நீதி மன்றத்துத் தீர்ப்பு கிடைத்ததும் அரசாங்கத்தின் அடுத்த திட்டம் என்ன என்பது அமுங்கித்தான் கிடந்தது. திராவிட முன்னேற்றக் கழகத்தினர் சென்னையில் துவக்கிய கிளர்ச்சி, திராவிட முன்னேற்றக் கழக மாணவர்கள் காட்டிய உணர்ச்சி, மந்திரி மாதவமேனனை வாய் திறக்கச் செய்தது. அப்பீல் செய்து சுப்ரீம் கோர்ட்டுக்குப் போகிறோம் என்றார்கள். அதன் பிறகு நாம், பொறுத்திருந்து பார்ப்போம் - போகாவிட்டால் கிளர்ச்சி துவக்குவோம்.

அப்பீலுக்கு போயிருக்கிறவர்கள் அங்கும் தோல்வி கண்டால் - அதன் பிறகு அரசியல் சட்டம் திருத்தப்படாவிட்டால் அப்போது எரிமலையாகக் குமுறப்போகிறது நமது கிளர்ச்சி. மூன்று கடல்களும் பொங்கி ஆதிக்க இமயத்தை மூழ்கடிக்கும் கிளர்ச்சி. சாவா? வாழ்வா? என்று முடிவு கட்டுகிற கிளர்ச்சி.

ஆளவந்தார் சுப்ரீம் கோர்ட்டிலிருந்து திரும்புகிற வரையில் நமக்கு வேறு பல வேலைகள் உண்டு. சமூக நீதி பற்றிய விளக்கவுரைகளாற்றி மக்களை விழிக்கச் செய்ய வேண்டும். மக்கள் விழிப்படைவார்கள். ஆனால் செயலாற்ற உடலில் வலுவில்லை. காரணந்தான் தெரியுமே - கொடுமையான காரணம். பசி. . . . பசி . . . . பருத்திக் கொட்டையை சாப்பிடு என முன்ஷி சிபார்சு செய்யுமளவுக்கு வளர்ந்து விட்ட பசி - திருநெல்வேலியிலும் வேறிடங்களிலும் தான் பெற்ற செல்வத்தைத் தன் வயிற்றில் கிடந்த வைடூரியத்தை, தாயார் விலை கூறி விற்று வயிற்றைக் கழுவிக் கொள்ளும்படி செய்த கோரப் பசி - இந்தப் பசி நீக்க, பாராள வந்தவர் எடுத்துக் கொண்ட முயற்சி, எட்டு அவுன்ஸ் அரிசியை ஆறு அவுன்சாக்கியதுதான். இந்தப் பசி போக்கும் கைங்கர்யத்தை செவ்வனே செய்ய யாரும் முன்வரவில்லை. நாமோ நாட்டு மக்களில் ஒரு பகுதி. ஆனாலும் வாயில்லாப் பூச்சிகளல்ல! நமது வார்த்தைகள் முதலில் அலட்சியப் படுத்தப்பட்டாலும் பிறகு அதுதான் “வேதவாக்”காக மாறியிருக்கிறது பலருக்கு.

பசியால், மக்கள் மாளும் நேரத்தில் பாராமுக மாயிருக்கும் சர்க்காருக்கு - ஒருமுறை நினைவு படுத்தும் நிகழ்ச்சியை நாம் நடத்திக் காட்ட வேண்டும். சென்னையிலே பட்டினிப் பட்டாள ஊர்வலம் நடந்த பிறகு நல்லதொரு எதிரொலி ஏற்பட்டது. அதுபோல திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே நாடெங்கும் ஒரு நாள் குறிக்கப்பட்டு பசியால் மாளும் மக்களின் பட்டியலை சர்க்காருக்குத் தர வேண்டும். அந்த நாள் சர்க்காரின் மந்தப் போக்கைக் குறைக்கு மென்ற நம்பிக்கையோடு, இதைச் செய்யலாமா செய்யக் கூடாதா என்ற முடிவை - செய்யலாம் என்றால் நாள் குறிப்பிடுங்கள் என்ற தாழ்மையான வேண்டுகோளை தலைமைக் கழகத்தின் முன் வைக்கிறேன். நம்முடைய கிளர்ச்சிகள் என்றும் தோற்றதில்லை அடக்குமுறைகளை வீசிய போதும் - சிறைச் சாலையிலே அடைத்தபோதும் - சிரச் சேதம் செய்வோம் என்று மிரட்டியபோதும் - நாம் பயந்து பின்னடைந்ததில்லை.

அந்த அஞ்சா நெஞ்சத்துடன் - அழகிரி சாமியை நினைத்துக் கொண்டு அண்ணாவின் படை வரிசையிலே சேர வேண்டுமென்றுதான் திராவிடப் பெருமக்களை அழைக்கிறேன். அப்படி அழைக்கும் போதுதான் அழைக்கப் பட்டவர்களை அமைப்பு முறையில் நடத்திச் செல்லக் கழகம் இன்னும் செப்பனிடப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

செயல்முறைத் திட்டங்களின் அமைப்பு முறைகளில் சிறிது அயர்ந்து விட்டது கழகம் என்னும்போது அந்தக் குற்றவாளிப் பட்டியலிலே நானும் அடங்கியிருக்கிறேன் என்பதை நினைவுபடுத்திக் கொண்டுதான் சொல்லுகிறேன். நம் குற்றம் கொள்கையை மீறியதல்ல, சிதறிக் கிடக்கும் சக்தியை ஒன்றுபடுத்தாததுதான் - சிந்திக் கிடக்கும் மலர்களை மாலையாக ஆக்காததுதான் அந்த அருமையான செயல் இந்த ஆண்டு தொடங்கிவிடும் என்று நம்புகிறேன். அதற்கான விடிவெள்ளி முளைத் திருக்கிறதாக உணருகிறேன்.

சென்னை தங்கசாலை வீதியிலே தலைமை நிலையம் பணி புரியத் தொடங்கி விட்டதையும் நீங்கள் அறிய வேண்டுமென்று கூறுகிறேன். இந்த ஆண்டிலே நாம் வளர்ந்து விட்டோம். வரும் ஆண்டிலே நம் கையில் வேலேந்திப் புறப்படப் போகிறோம், தோழர்களே! இந்த “வேலேந்தி” என்ற வார்த்தைகூட எதிரிகட்கும், சர்க்காருக்கும் பயங்கரமாகத் தோன்றும். பயப்படத் தேவை யில்லை. கொள்கையை வேலாக்கி அறப்போர் ஆரம்பமாகப் போகிறது என்பதை அறிவுறுத்து கிறேன், உங்கள் சார்பாக, அரசியலாருக்கு!

அகவிலை உயர்வை எதிர்த்து ஒரு போர்! அடக்குமுறையை எதிர்த்து ஒரு போர்! புத்தகங்களின் தடை உத்தரவை எதிர்த்து ஒரு போர்! நாடகத் தடைகளை மீறி ஒரு போர்! இப்படிப் போர்கள் நடக்கப் போவதில்லை. எல்லாவற்றையும் சேர்த்து ஒரே ஒரு போர்! அந்தப் போரிலே கலந்து வாகை மாலை சூட - வாரீர் தோழர்களே! பாண்டியன் பரம்பரையினரே! சேரன் சந்ததியினரே! சோழனின் சொந்தக்காரரே! வாரீர்! சிறுத்தையின் உறுமல் - சிங்கத்தின் சீற்றம் - கறுத்த கழுதையே அங்கேன் கனைக்கிறாய் என்று கேட்டிட வாரீர்! ஆண்ட இனத்தால் மீண்டும் முற்றுகை - மாண்டிடும் புழுவே மகுடம் கழற்று என்று மார் தட்டிட வாரீர்! புரட்சிப்பண் பாடிட வாரீர்!

வாரீர் வாரீர் . . . வாலிப வீரர்களே! வைர நெஞ்சுடைத் தோழியர்களே! வண்மை நிறை பெரியோர்களே! . . . என அழைக்கிறேன்.”

இளைய உடன்பிறப்புகளே!

அன்று அரும்பு மீசை இளைஞனாக இருந்த என் குரல் இப்படிக் கோவில்பட்டியிலே ஒலித்தது. இன்றும் அந்த இளைமைத் துடிப்புடன் ஒலிக்கிறது; இந்தக் குரல் ஒலியிலே அணிவகுத்திடு! பணி தொடர்ந்திடு!

**அன்புள்ள,**

**மு.க.**

(முரசொலி 28.11.2007)

# புயல் நிவாரணம் : ஒன்றியக் குழுவினரிடம் முதல்வர் வலியுறுத்தல்!

முதல் பக்கத் தொடர்ச்சி

பாதிப்புகளை பெருநகர சென்னை மாநகராட்சி, திருவள்ளூர், செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் ஆய்வு மேற்கொண்டது.

நேற்று (14.12.2023) தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை ஒன்றிய அரசின் பல்துறை ஆய்வுக் குழுவினர் சந்தித்து ஆலோசனை மேற்கொண்டனர். அவ்வமயம், மிக்ஜாம் புயலால் ஏற்பட்ட சேதங்களுக்கு நிதி ஒதுக்கீடு கோரும் கோரிக்கை மனுவினை (Memorandum) தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஒன்றிய அரசின் ஆய்வுக் குழுவின் தலைவரிடம் வழங்கினார்.

**தற்காலிக நிவாரண நிதியாக ரூ.7,033 கோடி வழங்க கோரிக்கை!**

இக்கோரிக்கை மனுவில், புயல் மழையால் சாலைகள், பாலங்கள், பள்ளிக் கட்டடங்கள், அரசு மருத்துவமனைகள் போன்ற பொதுக் கட்டமைப்புகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகளை சீர்செய்திடவும், மழை வெள்ளத்தால் சேதமடைந்துள்ள டிரான்ஸ்பார்மர்கள், மின் கம்பங்கள், பழுதடைந்த துணை மின் நிலையங்கள் உள்ளிட்ட மின்சார உட்கட்டமைப்புகளை சீர் செய்திடவும், பாதிக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில் குடிநீர் தொட்டிகள், தெரு விளக்குகள், கிராம சாலைகள் ஆகியவற்றை சீர் செய்திடவும் இழப்பீடுகள் கோரப்பட் டுள்ளது. மேலும், மிக்ஜாம் புயல் மழையால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் படகுகள், வலைகள் ஆகியவற்றிற்கு இழப்பீடுகள் வழங்கவும், சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ஏற்பட்டுள்ள இழப்புகளை ஈடுசெய்திடவும், சாலையோர வியாபாரிகள் மற்றும் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான உதவிகளை வழங்கிடவும், தற்காலிக நிவாரணத் தொகையாக 7033 கோடி ரூபாயும், நிரந்தர நிவாரணத் தொகையாக 12,659 கோடி ரூபாயும் கோரப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது :-

மிக்ஜாம் புயலால் ஏற்பட்ட வெள்ள சேதங்களைப் பார்வையிட்டு வந்துள்ள உங்கள் அனைவருக்கும் முதற்கண் என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னையில் கடந்த இரண்டு நாட்கள் நீங்கள் மேற்கொண்ட ஆய்வு பயனுள்ளதாக இருந்திருக்கும் என்று நான் நம்புகிறேன். இந்த வெள்ளச் சேதத்தை பொறுத்தவரை தமிழ்நாடு அரசு தேவையான எல்லா முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுத்திருந்தது. அதேபோல் புயல், மழையின் தாக்கத்திற்கு பிறகு, மீட்பு நிவாரண நடவடிக்கைகளும் முழுவீச்சில் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டது.

**தமிழ்நாடு அரசைப் பாராட்டிய ஒன்றியக் குழுவுக்கு நன்றி!**

நேற்று நடந்த செய்தியாளர்கள் சந்திப்பில் இதனை குறிப்பிட்டு நீங்கள் தமிழக அரசிற்கு பாராட்டுக்களை தெரிவித்திருந்தீர்கள், அதற்காக என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

வரலாறு காணாத இந்த பெருமழையின் காரணமாக ஏற்பட்ட மிகப் பெரிய சேதங்களை சரிசெய்து மீண்டும் உருவாக்கிடவும், வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட ஏழை எளிய மக்களுக்கு அதனை மீண்டும் உருவாக்கி வழங்கிடவும் தமிழ்நாடு அரசின் நிதி ஆதாரங்கள் மட்டும் போதுமானது அல்ல. ஒன்றிய அரசின் பங்களிப்பும் இதற்கு பெருமளவு தேவைப்படுகிறது. எனவே, மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ள குடும்பங்களுக்கு வாழ்வாதா ரங்களை மீட்க தேவையான உதவிகளை வழங்கவும் பல்வேறு வகையான சமூக உட்கட்டமைப்புகளை மீட்டுருவாக்கம் செய்யவும் ஒன்றிய அரசிற்கு நீங்கள் உரிய பரிந்துரை செய்து, தமிழ்நாடு அரசு கோரியுள்ள நிவாரணத் தொகையை பெற்றுத்தர வேண்டுமென்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு முதலமைச்சர் அவர்கள் ஒன்றிய குழுவினரை கேட்டுக் கொண்டார்.

இக்கூட்டத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வரலாறு காணாத இந்த பெருமழையின் காரணமாக ஏற்பட்ட மிகப் பெரிய சேதங்களை சரிசெய்து மீண்டும் உருவாக்கிடவும், வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட ஏழை எளிய மக்களுக்கு அதனை மீண்டும் உருவாக்கி வழங்கிடவும் தமிழ்நாடு அரசின் நிதி ஆதாரங்கள் மட்டும் போது மானது அல்ல. ஒன்றிய அரசின் பங்களிப்பும் இதற்கு பெரு மளவு தேவைப் படுகிறது. எனவே, மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ள குடும்பங்களுக்கு வாழ்வாதாரங்களை மீட்க தேவையான உதவிகளை வழங்கவும் பல்வேறு வகையான சமூக உட்கட்டமைப்புகளை மீட்டுருவாக்கம் செய்யவும் ஒன்றிய அரசிற்கு நீங்கள் உரிய பரிந்துரை செய்து, தமிழ்நாடு அரசு கோரியுள்ள நிவாரணத் தொகையை பெற்றுத்தர வேண்டும்.

## புயல் வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட - தகுதியுள்ள

# அனைவருக்கும் ரூ.6 ஆயிரம் நிச்சயம் வழங்கப்படும்!

### அம்பத்தூர் பி.கே.மூர்த்தி - மதுரை என்.மணிமாறன் இல்லத் திருமண விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

**சென்னை, டிச. 16 -**

**சென்னை கிழக்கு மாவட்ட தலைமைச் செயற்குழு உறுப்பினரும் - மாநகராட்சி மண்டலக் குழுத் தலைவருமான அம்பத்தூர் பி.கே.மூர்த்தி இல்லத் திருமணத்தை, நேற்று காலை, சென்னை - எழும்பூர், இராணி மெய்யம்மை ஹாலில் தலைமையேற்று நடத்தி வைத்து உரையாற்றிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட, தகுதியுள்ள அனைவருக்கும், அரசின் நிவாரணத் தொகையான ரூ.6 ஆயிரம் நிச்சயம் வழங்கப்படும்" என்று உறுதியளித்தார்.**

கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (14.12.2023) தலைமைச் செயற்குழு உறுப்பினரும், அம்பத்தூர் மண்டல குழுத் தலைவருமான பி.கே.மூர்த்தி அவர்களது இல்லத் திருமண விழாவில் ஆற்றிய உரையின் விவரம் வருமாறு:-

பி.கே.மூர்த்தி - திருமதி ஷீலா தம்பதியரின் அருமை மகன் அபிஷேக் மூர்த்தி அவர்களுக்கும் மணிமாறன் - திருமதி இந்திரா தம்பதியரின் மகள் டாக்டர் மனோதர்ஷ்னி அவர்களுக்கும் நம்முடைய அன்பான வாழ்த்துகளோடு இந்த மணவிழா நிகழ்ச்சி நிறைவேறியிருக்கிறது.

இந்த மணவிழா நிகழ்ச்சியில் நானும் பங்கேற்று, மணவிழாவை நடத்தி வைத்து, அதேநேரத்தில் மணமக்களை வாழ்த்தக்கூடிய ஒரு சிறப்பான வாய்ப்பைப் பெற்றமைக்கு மகிழ்ச்சி அடைகிறேன். வாய்ப்பினை உருவாக்கி தந்திருக்கக்கூடிய மணக்கோலம் பூண்டிருக்கக்கூடிய மணமக்களுக்கும், மணமக்களுடைய பெற்றோர்களுக்கும், உற்றார் உறவினர்களுக்கும், குறிப்பாக இந்தத் திருமணத்திற்குக் கட்டாயம் வந்திட வேண்டும் என்று நம்முடைய சேகர் பாபு அவர்கள் என்னை வலியுறுத்தி இதில் பங்கேற்கக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தமைக்காக அவருக்கும் மற்ற அனைவருக்கும் நான் முதலில் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன்.

**இயக்கப் பணி மட்டுமல்ல; பொதுப் பணிகளையும் சிறப்பாக ஆற்றி வருபவர் மூர்த்தி!**

நம்முடைய அருமை சகோதரர் மூர்த்தி அவர்களைப் பற்றி வாழ்த்தி உரையாற்றி இருக்கக்கூடிய அனைவரும் மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். முதன்முதலில் 1993ஆம் ஆண்டு மூர்த்தி அவர்கள் இளைஞரணியில் தன்னை இணைத்துக்கொண்டு, கழகப் பணியை ஆற்றத் தொடங்கி, அதற்கு பின்னால் அம்பத்தூர் நகராட்சியில் வட்டச் செயலாளராகப் பொறுப்பேற்று, பணியாற்றி, மூன்று முறை மாவட்டக் கழகப் பிரதிநிதியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு, அம்பத்தூர் பகுதியில் மாமன்ற உறுப்பினராகவும் தேர்வு செய்யப்பட்டு, அதேபோல, விசாகப்பட்டின துறைமுக பொறுப்புக்குழு உறுப்பினராகவும் இருந்து செயலாற்றி, இன்றைக்கு 80ஆவது வார்டு கவுன்சிலராகவும், அம்பத்தூர் பகுதியின் ஏழாவது மண்டலக் குழுத் தலைவராகவும் அவர் சிறப்பாக இயக்கப் பணியை, இயக்கப்பணி மட்டுமல்லாமல், பொதுப் பணிகளை, மக்களுக்கு ஆற்றவேண்டிய பணிகளை மிகச் சிறப்பாக ஆற்றிக் கொண்டிருக்கிறார்.

எப்படி மூர்த்தி அவர்கள் தன்னுடைய கடமையை ஆற்றிக் கொண்டிருக்கிறாரோ, அதேபோல, அவருடைய அருமை மகன் அபிஷேக் மூர்த்தி அவர்கள், மக்களுக்காக நியாயம் கிடைக்க வேண்டும் என்பதற்காக, நீதி கிடைக்கவேண்டும் என்பதற்காக வழக்கறிஞராகத் தன்னுடைய கடமையை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்.

மணமகன் ஒரு வழக்கறிஞர், மணமகள் மனோதர்ஷினி ஒரு மருத்துவர். வழக்கறிஞருக்கு, மருத்துவருக்கு நான் அறிவுரைகளை, ஆலோசனைகளைச் சொல்லவேண்டிய அவசியமில்லை. யாருக்காவது உடல்நலம் பாதிக்கப்பட்டால், அந்த பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய மக்களுக்குத் தொண்டாற்றக்கூடிய



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (14.12.2023) சென்னையில், அம்பத்தூர் மண்டலக் குழுத் தலைவர் மூர்த்தி அவர்களின் மகனும் அரசு வழக்கறிஞருமான அபிஷேக் மூர்த்தி – மதுரை மனோ நிறுவனங்களின் உரிமையாளர் என்.மணிமாறன் – எம்.இந்திரா ஆகியோரின் புதல்வி டாக்டர் எம்.மனோதர்ஷ்னி ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்து, மணமக்களை வாழ்த்தினார். உடன் இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் ஜோசப் சாமுவேல், தாயகம் கவி, இ.பரந்தாமன், துணை மேயர் மு.மகேஷ்குமார், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப.ரங்கநாதன், முரசொலி செய்தி ஆசிரியர் கு.சேது மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

பணி, மணமகளாக இருக்கக்கூடிய மனோதர்ஷினி அவர்களுக்கு. அதேபோல யாருக்காவது நியாயம் கிடைக்கவில்லை, நீதி கிடைக்கவில்லை என்று சொன்னால், அதற்காக வாதாடக்கூடிய, போராடக்கூடிய இடத்திலிருந்து அந்தப் பணியை ஆற்றக்கூடியவர் நம்முடைய மணமகன் அபிஷேக் மூர்த்தி அவர்கள். இருவரும் பொருத்தமாகத்தான் சேர்ந்திருக்கிறார்கள்.

**கோடிக்கணக்கான குடும்பங்களுக்கான கலங்கரை விளக்குதான் தி.மு.கழகம்!**

இன்றைக்கு பி.கே.மூர்த்தி அவர்கள் மட்டும் திராவிட இயக்கத்தில் இருக்கக்கூடியவர் அல்ல, மணமகளாக வீற்றிருக்கக்கூடிய மனோதர்ஷினி அவர்களுடைய தந்தை மணிமாறன், அவரும் திராவிட இயக்கத்தில் பற்றுள்ளவர். திராவிட முன்னேற்றக் கழகத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருக்கக்கூடியவர். இன்னும் சொல்ல வேண்டும் என்று சொன்னால், மணிமாறன் அவர்களுடைய திருமணத்தை 1994ஆம் ஆண்டு மதுரையில் நான்தான் நடத்தி வைத்திருக்கிறேன். இப்போது மூர்த்தியின் மகனுக்கும், மணிமாறனின் மகளுக்கும் இந்தத் திருமணத்தை நடத்தி வைக்கிறேன். இந்த மணமக்களுக்குப் பிறக்கக்கூடிய குழந்தைகளுக்கும் நான்தான் திருமணம் நடத்தி வைப்பேன். அவர்களுக்குப் பிறக்கக்கூடிய கொள்ளுப் பேரன், பேத்திகளாக இருந்தாலும் அவர்களுக்கும் நான் நடத்தி வைக்கக்கூடிய வாய்ப்பு எனக்கு கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

எதற்காக இதைச் சொல்கிறேன் என்று சொன்னால், குடும்பம் குடும்பமாக இந்த இயக்கத்தில் இருக்கிறார்கள். குடும்பம், குடும்பம் என்று சொன்னால், அதை

**அனைத்துத் தரப்பு மக்களுக்கும் எப்போதும் பாகுபாடின்றி துணை நிற்கும் தி.மு.கழகம்!**

வைத்து ஒரு அரசியல் செய்வார்கள். குடும்பம் இருப்பவர்கள்தான் குடும்பத்தைப் பற்றி கவலைப்படுவார்கள். இது கழகக் குடும்பம். அதனால்தான் அண்ணா அவர்கள் கழகத்தில் இருக்கக் கூடிய தோழர்களைத் தம்பி என்று அழைத்தார். அதைத் தொடர்ந்து நம்முடைய கலைஞர் அவர்கள் நம்முடைய தோழர்களை பார்த்து உடன்பிறப்பு என்று அழைத்தார். அதாவது, தம்பி உண்டு, அண்ணன் உண்டு, தங்கை உண்டு, அக்கா உண்டு, மாமா உண்டு, மாமி உண்டு என்று உடன்பிறப்புகள் என்று அழைத்தார் கலைஞர் அவர்கள். கோடிக்கணக்கான குடும்பங்களுக்கு இருக்கக்கூடிய ஒரு கலங்கரை விளக்குதான் திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை மறந்துவிடக் கூடாது.

அண்மையில் பெய்த மழை கிட்டதட்ட 47 வருடங்களாகப் பார்க்க முடியாத, வரலாறு காணாத அளவிற்கு பெய்திருக்கக் கூடிய மழை. அந்த மழை வருவதற்கு 4 நாட்களுக்கு முன்பே எச்சரிக்கை செய்தார்கள். ஆனால் எச்சரிக்கை செய்தது எல்லாம் மீறி இதுவரை 47 வருடங்களாகப் பார்க்காத மழையை நாம் பார்த்தோம். எப்போதும், திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரைக்கும் ஆட்சியில் இருந்தாலும் சரி, இல்லையென்றாலும் சரி மக்களுக்காகப் பாடுபடக்கூடிய கட்சி. நாம் பலமுறை ஆட்சியில் இருந்திருக்கிறோம். பலமுறை ஆட்சியில் இல்லாமல் இருந்திருக்கிறோம். ஆட்சியில் இருக்கும் போது இப்படிப்பட்ட பேரிடரைச் சந்தித்திருக்கிறோம். ஆட்சியில் இல்லாத நேரத்தில் சந்தித்திருக்கிறோம்.

**கொரோனா காலத்தில் கொடுமையான சூழ்நிலை!**

ஆட்சியில் இருக்கின்ற நேரத்திலாவது, அந்த அதிகாரம், அந்த வசதிகள், மீட்பு நேரத்தில் ஈடுபடக்கூடிய கருவிகள், அவை கள் எல்லாம் நமக்கு சுலபமாகக் கிடைத்துவிடும், அதைப் பயன்படுத்தி, அந்தப் பணிகளை எல்லாம் நிறைவேற்றிக் கொள்ள முடியும். ஆனால் ஆட்சியில் இல்லாத நேரத்தில், நாம் சந்தித்த பேரிடரில் எப்படியெல்லாம் அந்தக் களத்தில் இறங்கியிருந்தோம் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். உதாரணமாக, கொரோனா என்ற கொடிய நோய் வந்தது. அந்தக் கொடிய நோய் வந்தபோது எவ்வளவு பேரை இழந்தோம். எப்படிப்பட்ட கொடுமைகளுக்கெல்லாம் ஆளாக்கப்பட்டோம், பொருளாதாரம் எந்தளவுக்குச் சீர்குலைந்து போனது. வெளியில் நடமாட முடியாத நிலை. வீட்டை விட்டு வெளியே வரமுடியாத நிலை. தொழிலுக்குப் போக முடியவில்லை, வேலைக்குப் போகமுடியவில்லை, பள்ளிக்கூடத்திற்கு போகமுடியவில்லை. கடைக்குச் சென்று உணவு வாங்குவதற்கான அந்த வசதி கூட இல்லாத ஒரு கொடுமையான சூழ்நிலை. அந்த நேரத்தில், அரசாங்கம் என்ன செய்யவில்லை, என்ன செய்திருக்கவேண்டும், அதைப் பற்றியெல்லாம் பேச நான் விரும்ப வில்லை. இப்போது அது தேவையில்லை.

**பெரும் வெள்ளத்திலிருந்து சென்னையை மீட்டுள்ளோம்!**

திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு எதிர்க்கட்சியாக இருக்கும்போது, "ஒன்றிணைவோம் வா" என்ற தலைப்பில் ஒரு அறிவிப்பு வெளியிட்டு, அந்த ஒன்றிணைவோம் வா என்ற திட்டத்தின் மூலம் தமிழ்நாடு முழுவதும் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய மக்களுக்கு, வாழ்வாதாரத்தை இழந்து தவித்துக் கொண்டிருக்கக்கூடிய அந்த மக்களுக்கு உண்ண உணவு, இருப்பதற்கு இருப்பிடம், உடுக்க உடை, மருத்துவ வசதி, தேடித் தேடிச் சென்று அவர்களைத் தொடர்பு கொண்டு நாமாக முன்கூட்டியே தேடித் தேடிச் சென்று அவர்களுக்கு வேண்டிய வசதிகளை எல்லாம் செய்த கட்சிதான் இன்றைக்கு கம்பீரமாக சொல்லமுடியும் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்தின் இயக்கம்.

இங்கே குறிப்பிட்டுப் பேசினார்கள், ஏற்கனவே, 2015ஆம் ஆண்டு ஒரு வெள்ளம் வந்தது. அதனால் நான் அதிகம் பேச விரும்பவில்லை. அப்போது அம்மையார் ஜெயலலிதா அவர்கள் முதலமைச்சராக இருந்தார்கள். அப்போதும் எச்சரிக்கை விடப்படுகிறது. செம்பரம்பாக்கம் ஏரி நிரம்பியது. செம்பரம்பாக்கம் ஏரியை நிரம்பவிடக் கூடாது. அப்படி ஒரு சூழ்நிலை வருகின்றபோது கொஞ்சம்

**தமிழ்நாட்டு மக்களுக்குத் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில் இல்லாத நேரத்திலும் சரி, இப்போது ஆட்சியில் இருக்கின்ற நேரத்திலும் சரி எப்படி துணை நிற்கிறதோ, அது தொடர்ந்து நிற்கும். அதில் எந்தவித மாற்றமும் கிடையாது.**

கொஞ்சமாக தண்ணீரைத் திறந்து அதை வெளியேற்றினால்தான் ஆபத்தைத் தடுக்கமுடியும், வெள்ளத்தைத் தடுக்கமுடியும். அதனைத் திறந்து விடுவதற்கு அரசிடம் அனுமதி வாங்க வேண்டும். அரசு நடத்தக்கூடியவர் அன்றைக்கு முதலமைச்சராக இருந்த அம்மையார் ஜெயலலிதா அவர்கள். அவரிடத்தில் அனுமதி கேட்கக்கூட அதிகாரிகள் பயந்தார்கள். அப்படி ஒரு கொடுமையான நிலை அன்றைக்கு இருந்தது. அதிகாரிகள் சென்று அனுமதி கேட்டுக் கொஞ்சம் கொஞ்சமாகத் தண்ணீரை திறந்துவிட்டிருந்தால் அந்த ஆபத்து நிச்சயமாக வந்திருக்காது. நூற்றுக்கணக்கானவர்களை அன்றைக்கு நாம் இழந்தோம். இன்னும் சிலவற்றிக்குக் கணக்கே இல்லை. அப்படிப்பட்ட ஒரு நிலைமை ஏற்பட்டது. ஆனால் அதைவிட மோசமான நிலையில், வரலாற்றிலேயே காணமுடியாத இந்தச் சூழ்நிலையில் செம்பரம்பாக்கம் ஏரியை நிரம்பவிடாமல், கொஞ்சம் கொஞ்சமாகத் தண்ணீரைத் திறந்துவிட்டு, சென்னை சந்திக்க இருந்த ஒரு பெரும் வெள்ளத்திலிருந்து மீட்ட அரசுதான் நம்முடைய திராவிட மாடல் அரசு என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது.

இப்போது வந்த மழையில் அரசு வரிந்துகட்டிக் கொண்டு முனைப்போடு, பல நலத் திட்ட உதவிகளை, நிவாரணப் பணிகளில் எப்படியெல்லாம் ஈடுபட்டது என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். அதற்கு ஈடாக நிவாரணப் பணிகளில் ஈடுபட்ட கட்சி எது என்றால், அது நம்முடைய கட்சி. அனைத்து அமைச்சர்களும் வெள்ளம் பாதிக்கப்பட்டப் பகுதிகளுக்கு சென்றார்கள். அனைத்து சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களும், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த அத்தனை தோழர்கள் அத்தனை பேரும், மாவட்டச் செயலாளர்கள், ஒன்றியச் செயலாளர்கள், பகுதிச் செயலாளர்கள் அத்தனை பேரும் சென்றிருந்தார்கள். பாதிக்கப்பட்ட மக்களுக்குத் துணை நின்றார்கள். கை கொடுத்தார்கள். அதனால்தான் பெரும் சேதம் தவிர்க்கப்பட்டது என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது.

ஆனால், அன்றைக்குப் பலர் உதவி செய்கிறோம் என்று சொல்லி, அந்த உதவிப் பொருட்களை எல்லாம் வேன், லாரி, பஸ்ஸின் மூலமாக அனுப்பி வைத்தார்கள். அதில் அனுப்பி வைக்கும்போது கூட அம்மையார் ஜெயலலிதா அவர்களின் ஸ்டிக்கரை அ.தி.மு.க. என்று ஒட்டி அனுப்பி வைத்தார்கள். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் கட்சிப் பாகுபாடில்லாமல், யாராக இருந்தாலும் அவர்களுக்குத் துணை நின்ற ஒரு கட்சியாக, துணை நின்ற ஒரு ஆட்சியாக இன்றைக்கு கழகம் விளங்கிக் கொண்டிருக்கிறது.

**தகுதியுள்ள அத்தனை பேருக்கும் ரூ.6000 வழங்கப்படும்!**

பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய மக்களுக்குக் குறிப்பாகச் சென்னையைப் பொறுத்தவரையில் முழுமையாகவும், சென்னையை ஒட்டியுள்ள, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் எங்கெங்கு பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய அந்தப் பகுதிகளுக்கு, யார் பாதிக்கப்பட்டிருந்தாலும் அத்தனை பேருக்கும் நிச்சயமாக, உறுதியாக 6000 ரூபாய் வழங்கப்படும். எப்படி மகளிர் உரிமைத் தொகையை தகுதியுள்ளவர்கள் அத்தனை பேருக்கும் 1000 ரூபாய் வழங்கப்படும் என்ற அறிவித்து, அதை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோமோ, அதேபோல இந்த 6000 ரூபாய் தகுதியுள்ள அத்தனை பேருக்கும் நிச்சயமாக, உறுதியாக வழங்கப்படும் என்பதை மாத்திரம் இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லி, இப்போது கூட நான் சீக்கிரமாகச் செல்லவேண்டும். ஒன்றிய அரசிடமிருந்து ஒரு குழு வந்திருக்கிறது. மூன்று நாட்களாக வெள்ளம் பாதித்த பகுதிகளுக்குச் சென்று ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்கள். மூன்று நாட்களாக ஆய்வு செய்து கொண்டிருக்கக்கூடிய அதிகாரிகள் கூட, நீங்கள் பத்திரிகைகளிலும், ஊடகங்களிலும் பார்த்திருப்பீர்கள். இந்த வெள்ளச் சேதத்தை மிக சாமர்த்தியமாகத் தமிழ்நாடு அரசு கையாண்டிருக்கிறது. அரசியல் ரீதியாக ஒன்றிய அரசோடு எவ்வளவோ பிரச்சினைகள் இருக்கலாம். ஆனால் அதையெல்லாம் மறந்து ஒன்றிய அரசிடமிருந்து வந்து இங்கே ஆய்வு செய்திருக்கக் கூடிய அதிகாரிகள் அத்தனை பேரும் தமிழ்நாடு அரசை மனதாரப் பாராட்டியிருக்கும் செய்தியை நாம் பார்க்கிறோம். இன்றைக்கு இன்றுடன் முடித்து கடைசியாக, காலை 11.15 மணிக்கு என்னைச் சந்திக்கக் கோட்டைக்கு வரவிருக்கிறார்கள். அவர்களுடன் நானும் கலந்து பேசவிருக்கிறேன். எப்படி தமிழ்நாட்டு மக்களுக்குத் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில் இல்லாத நேரத்திலும் சரி, இப்போது ஆட்சியில் இருக்கின்ற நேரத்திலும் சரி எப்படி துணைநிற்கிறதோ, அது தொடர்ந்து நிற்கும். அதில் எந்தவித மாற்றமும் கிடையாது என்பதை மாத்திரம் இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லி, இன்றைக்கு மணக்கோலம் பூண்டிரு க்கக்கூடிய மணமக்கள் வாழ்க்கையில் எல்லா நன்மைகளும் பெற்றுச் சிறப்போடு வாழவேண்டும்.

புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதி தாசன் எடுத்துச் சொல்லியிருக்கும் "வீட்டிற்கு விளக்காக... நாட்டிற்குத் தொண்டர்களாய்" இருந்து வாழுங்கள்... வாழுங்கள். அதே நேரத்தில், ஒரு பணிவான வேண்டுகோள் அல்ல, ஒரு கண்டிப்பான வேண்டுகோள்.

மணமக்களான உங்களை நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, உங்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு அழகான தமிழ்ப் பெயர்களைச் சூட்டுங்கள், சூட்டுங்கள், என்று கேட்டு, வாழ்க மணமக்கள்... வாழ்க மணமக்கள்... விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

### சென்னையில் ஆளுநர் மாளிகைக்கு வெளியே ஒருவர் பெட்ரோல் குண்டு வீசியபோது - சட்டம் ஒழுங்கு கெட்டு விட்டது என்று கூச்சலிட்டவர்கள்

# நாடாளுமன்றத்துக்குள்ளேயே புகைக்குண்டு வீசப்பட்டுள்ளபோது எங்கே போனார்கள்?

## ‘சன் செய்திகள்’ தொலைக்காட்சியின் ‘கேள்விக்களம்’ விவாத நிகழ்ச்சியில் - ஆளூர் ஷாநவாஸ் எம்.எல்.ஏ. கேள்வி!

**சென்னை, டிச.16 -**

**“சென்னையில் ஆளுநர் மாளிகைக்கு வெளியே ஒருவர் பெட்ரோல் குண்டு வீசியபோது-சட்டம் ஒழுங்கு கெட்டு விட்டது என்று கூச்சலிட்டவர்கள் நாடாளுமன்றத்துக்குள்ளேயே புகைக்குண்டு வீசப்பட்டுள்ள போது எங்கே போனார்கள்?” என்று ‘சன்’ செய்திகள் தொலைக்காட்சியின் ‘கேள்விக் களம்’ விவாத நிகழ்ச்சியில் பங்கேற்ற ஆளூர் ஷாநவாஸ் எம்.எல்.ஏ. கேள்வி எழுப்பினார்.**

இந்தியாவினுடைய மிகப் பாதுகாப்பான கட்டடம் என்று கருதக்கூடிய நாடாளுமன்றத்தின் மக்களவைக்குள் நான்கு பேர் சென்று, அதில் இரண்டு பேர் பார்வையாளர் மாடத்திலிருந்து தாவிச் சென்று முழக்கங்களை எழுப்பி, வண்ணப் புகைக் குண்டுகளைப் பயன்படுத்தி தாக்குதலை நடத்தி இருக்கிறார்கள்.

இதுகுறித்து 13.12.2023 அன்று ‘சன்’ செய்திகள் தொலைக் காட்சியில், நெறியாளர் **மு.குணசேகரன்** நடத்திய ‘கேள்விக் களம்’ விவாத நிகழ்ச்சியில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் ஆளூர் ஷாநவாஸ் கூறியதாவது:-

காந்தியடிகள் திட்டமிட்ட சதியின் காரணமாகக் கொல்லப்பட்டார். இந்திரா காந்தி திட்டமிட்ட சதியின் காரணமாகக் கொல்லப்பட்டார். ராஜீவ் காந்தியும் திட்டமிட்ட சதியின் காரணமாகக் கொல்லப்பட்டார்.

**நீங்கள்தான் சொன்னீர்கள், காந்தியடிகள் படுகொலை பற்றியும், இந்திரா காந்தி படுகொலை பற்றியும், ராஜீவ் காந்தி படுகொலைபற்றியும் அதனுடைய தொடர்ச்சியாக ராகுல் காந்திக்கு அச்சுறுத்தல் இருக்கிறதா, இல்லையா? இன்றைக்கு ராகுல்காந்தி தான் கவனிக்கப்படுகின்ற தலைவர். இன்றைய பி.ஜே.பி. ஆட்சியை அகற்றுவதற்கு இந்தியா முழுவதும் நடைப்பயணம் சென்ற தலைவர். இன்றைக்கு அவர்தான் கவனிக்கப்படக் கூடிய தலைவர்.**

**ஆர்.எஸ்.எஸ்.சுக்கு நேர் எதிர் சித்தாந்தத்தை முன்வைத்து இன்றைக்குக் களத்திற்குப் போகக்கூடிய தலைவர்.காங்கிரஸ் இவ்வளவு நாளும் பேசாத கருத்துகளைப் பேசி, காங்கிரசுக்கு உள்ளேயும் ஒரு மறுசீரமைப்பை கட்டமைத்திருக்கின்ற தலைவர்.அப்படிப்பட்டவர் இன்றைக்கு நாட்டிற்குத் தேவையானவராக இருக்கிறார். அவருடைய உயிருக்கு மிகப்பெரிய அச்சுறுத்தல் இருக்கிறது. அப்படிப்பட்டவர் அவைக்குள் இருக்கும்பொழுது, இப்படிப்பட்ட சம்பவம் நடக்கிறது என்றால், அதுவும் புதிய நாடாளுமன்றத்திற்குள் நடக்கிறது என்றால், அதைப் பற்றி கேள்வி கேட்கக்கூடாதா?**

### இந்நிகழ்விற்கும் சதி உண்டா?

முன்பு, நாடாளுமன்றத் தாக்குதலும் பி.ஜே.பி.யின் ஆட்சியின்போது சதியின் காரணமாக நடந்தது.

இப்பொழுது மீண்டும் நாடாளுமன்றத்தின்மீது தாக்குதல் நடத்தப்பட்டு இருக்கிறது பா.ஜ.க. ஆட்சியில். இந்நிகழ்விற்கும் சதி உண்டா? இல்லையா? என்பதுதான் இப்பொழுது ஆய்வுக்கு உரியது.

நான் ஒரு சட்டமன்ற உறுப்பினர். மூன்று மாதங்களுக்கு முன்பு நாடாளுமன்றத்தைப் பார்ப்பதற்காகச் சென்றேன். புதிய நாடாளுமன்றம் அப்பொழுது பூட்டப்பட்டு இருந்தது, அனுமதிக்கப்படவில்லை. பழைய நாடாளு மன்றக் கட்டடத்தைப் பார்ப்பதற்கு அனுமதிக்கப் பட்டோம். அதற்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பரிந்துரைக் கடிதம் பெற்று, சட்டமன்ற உறுப்பினரின் அடையாள அட்டைகளையும் பெற்று, எல்லா தகவல்களையும் பெற்று, முறையான பரிசோதனை நடத்தப்பட்டு, அதற்குப் பிறகு, கூடவே ஒருவர் வந்து, நாடாளுமன்ற மாடத்தில் இருந்து, நாடாளுமன்ற அவை நடவடிக்கைகளைப் பற்றி விவரித்தார். அப்பொழுது நாடாளுமன்றம் நடைபெறவில்லை.

### சட்டமன்ற உறுப்பினருக்கே இவ்வளவு கெடுபிடி!

நாடாளுமன்றம் நடைபெறாத நிலையில், பழைய நாடாளுமன்றத்தைப் பார்ப்பதற்கே ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கு இவ்வளவு கெடுபிடி இருந்தது. அவ்வளவு சோதனைகளுக்குப் பிறகு, என்னுடைய ஆவணங்களையெல்லாம் சரிபார்த்த பிறகுதான், என்னை அனுமதித்தார்கள். என்னுடன் ஒருவரையும் அனுப்பி வைத்தனர்.

புதிய நாடாளுமன்றத்தைப் பார்ப்பதற்கு அனுமதி இல்லை அப்பொழுது.

அப்படியென்றால், இந்த அளவிற்குப் பாதுகாப்பு அங்கே இருக்கிறது என்பதை இரண்டு, மூன்று மாதங்களுக்கு முன்பு நானே பார்த்தேன்.

தமிழ்நாடு சட்டமன்றத்திற்குள் பார்வையாளர்களை அனுமதிக்கப்படுகிறார்கள். நாங்கள் ஒரு கடிதம் கொடுப்போம். பரிந்துரை செய்யப்பட்ட ஆட்களை உள்ளே அனுமதிக்கிறார்கள். தனியே ஒரு மாடம் இருக்கிறது, அதில் முன்னுரிமையின் அடிப்படையில் பொது ஆட்களை அனுமதிக்கிறார்கள். அந்தப் பொதுவான மாடத்தில், பள்ளி மாணவர்கள், கல்லூரி மாணவர்கள், பொதுமக்கள் அனுமதிக்கப்படுகிறார்கள்.

ஆனால், அங்கே இருந்து யாரும் எதையும் தூக்கி அவைக்குள் எறிய முடியாது. காரணம், இடைப்பட்ட பகுதியில் ஒரு வலை அமைக்கப்பட்டு இருக்கிறது.



மு. குணசேகரன்
நெறியாளர்



ஆளூர் ஷாநவாஸ் எம்.எல்.ஏ.
விடுதலைச் சிறுத்தைகள் கட்சி

நான் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தின் நடவடிக்கையை நேரில் பார்த்திருக்கிறேன். இங்கே சட்டமன்றத்தையும், நாடாளுமன்றத்தையும் கட்டியவர்கள்தான் அவர்கள். அங்கே உள்ள பிரிட்டிஷ் நாடாளுமன்றம் எப்படி கட்டப்பட்டு இருக்கிறதோ, அதே போலதான், இங்கேயும் கட்டி இருக்கிறார்கள்.

மாடத்தில் ஒரு கண்ணாடி வைத்திருக்கிறார்கள்; அங்கே இருந்து அவை நடவடிக்கையைப் பார்க்கலாமே தவிர, அவையில் பேசுவது எதுவும் கேட்காது. எதையும் தூக்கி அவையின் உள்ளே போட முடியாது. அந்த அளவிற்குப் பாதுகாப்போடு அந்த நாடாளுமன்றம் வடிவமைக்கப் பட்டு இருக்கிறது.

ஏற்கெனவே நம்முடைய நாட்டில் உள்ள நாடாளுமன்றக் கட்டடத்தில் பார்வையாளர் மாடம் என்பது அவ்வளவு உயரமாக இருக்கிறது.

### எப்படி போனார்கள் என்பது பெரிய கேள்வி!

புதிதாக இவர்கள் வடிவமைத்து கட்டியுள்ள நாடாளுமன்றத்தில், நாடாளுமன்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்பொழுதே, எப்படி ஆவணங்கள் இல்லாமல், கைகளில் ஒரு பொருளையும் தூக்கிக் கொண்டு உள்ளே போனார்கள்? யார் என்று முகம் தெரியாதவர்கள் எப்படி போனார்கள் என்பது மிகப்பெரிய கேள்வி.

ஆகவே, இதற்குப் பின்னால் ஒரு சதி இருக்கிறது என்ற சந்தேகம் நமக்கு வருகிறது.

பூட்டப்பட்ட நாடாளுமன்றத்திற்குள்ளே கூட ஒரு சட்டமன்ற உறுப்பினராக இருக்கின்ற நான் செல்லமுடியவில்லை, அனுமதி இல்லை என்று சொல்லிவிட்டார்கள். பழைய நாடாளுமன்றக் கட்டடத்தைப் பார்ப்பதற்குக்கூட ஆவணங்களை சரி பார்த்து, பூட்டப்பட்டிருக்கின்ற நாடாளுமன்றம், இனி செயல்பாட்டில் இல்லாத நாடாளுமன்றம், வெறும் கட்டடம் அந்தக் கட்டடத்தைப் பார்ப்பதற்குக்கூட அவ்வளவு செக்யூரிட்டி, ஆவணங்களை வாங்கிப் பார்த்துத்தான் உள்ளே அனுமதித்தார்கள்.

### வரவழைக்கப்பட்டார்களா என்பதுதான் கேள்வி!

அவை நடவடிக்கைகள் இல்லாத நாள்களிலேயே அப்படி என்றால், அவை நடவடிக்கை நடைபெறுகின்ற நாளில், அதுவும் நாடாளுமன்றத் தாக்குதல் நாளில், ஆவணங்கள் சரிபார்க்கப்படாமல், கையில் பொருளோடு, ஒரு அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடிய பொருளோடு எப்படி உள்ளே வந்தார்கள். உள்ளே வந்தார்களா? வரவழைக்கப் பட்டார்களா? என்பதுதான் இப்பொழுதைய கேள்வி.

அவையில் பிரதமர் இல்லை, உள்துறை அமைச்சர் இல்லை. ராகுல் காந்தி இருக்கிறார். அப்படியென்றால், ராகுல் காந்திக்கு வைக்கப்பட்ட குறியா? என்கிற சந்தேகமும் வருகிறது அல்லவா!

இந்தக் கேள்வியை முன்வைக்க வேண்டியது எங்கள் கடமை!

எப்படி அவர்கள் உள்ளே வந்தார்கள் என்று பதில் சொல்லுங்கள்!

யாராலும் எளிதில் நாடாளுமன்றக் கட்டடத்திற்குள் போக முடியாது என்கிற பொழுது, இளைஞர்கள் எப்படி உள்ளே வந்தார்கள்? அதுவும் நாடாளுமன்றம் நடக்கும்பொழுதே நாடாளுமன்றம் தாக்கப்பட்ட நாளில்?

### அமிலக் குண்டாக இருந்தால் என்னவாகியிருக்கும்?

வண்ணப் புகைக் குண்டு மட்டும் வெடிக்கப்படாமல், அமிலக் குண்டாகவோ அல்லது வேறு ஏதாவது பொருளாக இருந்திருந்தால், என்னவாகியிருக்கும்?

அப்படியென்றால் நாங்கள் முன்வைக்கின்ற கேள்விக்குப் பொருள் வந்துவிடும் அல்லவா!

ராகுல் காந்தி அவையில் இருக்கிறார். கைகளில் உயிருக்கு அச்சுறுத்தக் கூடிய பொருளோடு சிலர் வந்திருந்தால் என்னவாகியிருக்கும். அதற்கு என்ன சொல்வீர்கள்? அதுபோன்று நடக்கவில்லை என்பதால், இல்லை என்றாகிவிடுமா?

உள்ளே வருவதற்கு அவர்களுக்கு எப்படி அனுமதி கிடைத்தது? பரிந்துரை கடிதம் கொடுத்திருப்பது பி.ஜே.பி. எம்.பி.

தமிழ்நாட்டில், ஆளுநர் மாளிகைக்கு வெளியே, சாலையில் பெட்ரோல் குண்டு வீசியவரை ஜாமீனில் எடுத்தது பி.ஜே.பி. வழக்குரைஞர்.

எப்படி இவையெல்லாம் ஒவ்வொன்றாக சேருகிறது. எப்படி இவையெல்லாம் ஒரே மய்யப்புள்ளியில் சந்திக்கின்றது.

தமிழ்நாட்டில் ஆளுநர் மாளிகைக்கு முன்னால், ரோட்டில், ஒருவன் பெட்ரோல் வெடிகுண்டு வீசியதை ஆளுநர் மாளிகை மீது தாக்குதல் என்று சொன்னீர்கள்.

# “ராகுல் காந்திக்கு வைக்கப்பட்ட குறியா?” என்கிற சந்தேகமும் எழுகிறது!

ஆளுநர் அவர்கள் மிகப்பெரிய அறிக்கையை விட்டார். கடைசியில் என்னாயிற்று? அந்த இடத்திலேயே குண்டு எறிந்தவனை கையும், களவுமாக மடக்கிப் பிடித்தது தமிழ்நாடு காவல்துறை. சட்டம் - ஒழுங்கு அந்த இடத்திலேயே நிலைநாட்டப்பட்டது.

### சட்டம் - ஒழுங்கை நிலை நாட்டினீர்களா?

இன்றைக்கு டில்லியில் சட்டம் - ஒழுங்கை நிலை நாட்டினீர்களா?

யார் அவர்களை மடக்கிப் பிடித்தது?

டில்லி காவல்துறை பிடித்ததா?

நாடாளுமன்றக் காவலர்கள் பிடித்தார்களா?

இல்லை!

நாடாளுமன்ற உறுப்பினர்கள்தான் பிடித்தனர். காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள்தான் பிடித்தார்கள்.

தமிழ்நாட்டில், ஆளுநர் மாளிகையில் உள்ளவர்கள் பிடித்தார்களா? தமிழ்நாடு காவல்துறை பிடித்ததா?

தமிழ்நாட்டில் நடைபெற்றது ரோட்டிற்கு வெளியேதான்.

**இது முழுக்க முழுக்க ஒன்றிய அரசின் தோல்வி முழுக்க முழுக்க பாதுகாப்பு குறைபாடு.**

**முழுக்க முழுக்க இதை விசாரிக்க வேண்டும். இதற்குப் பொறுப்பேற்று பிரதமர் பதவி விலகவேண்டும் உள்துறை அமைச்சர் பதவி விலக வேண்டும்!**

ஆனால், டில்லியில் நடைபெற்றது நாடாளுமன்றத்திற்குள்ளே நடைபெற்றுள்ளது.

சம்பந்தப்பட்ட நபர்கள், இன்றைக்கு முஸ்லிம்களாக இருந்திருந்தால், இதனுடைய எதிர்வினை என்னவாக இருக்கும்?

பரிந்துரை கடிதம் கொடுத்தவர் காங்கிரஸ் கட்சி எம்.பி.,யாகவோ, தி.மு.க. எம்.பி.,யாகவோ அல்லது எங்கள் கட்சி எம்.பி.,யாகவோ, எங்கள் தலைவரோ கொடுத்திருந்தால், இன்றைக்கு என்னவாகி இருக்கும்?

அதேபோல், இன்றைக்கு இந்தப் பிரச்சினையில் பிரதமர் அவையில் இருந்து, உள்துறை அமைச்சரும் உள்ளே இருந்து இந்தச் சம்பவம் நடந்திருந்தால், அதனுடைய விளைவு எப்படி இருந்திருக்கும்?

### ஆளைப் பொறுத்துதான் நடவடிக்கையா?

அப்படியென்றால், நீங்கள், எடுக்கும் நடவடிக்கைகள் எல்லாம், ஆளைப் பொறுத்து, சம்பவத்தில் ஈடுபட்ட நபர்களின் பெயர்களைப் பொறுத்து, யாருடைய ஆட்சி என்பதைப் பொறுத்து தானா?

காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் இப்படி நடந்திருந்தால், எதிர்க்கட்சித் தலைவராக மோடியோ, அமித்ஷாவோ இருந்திருந்தால் என்னவாகி இருக்கும்?

மோடிக்கு பஞ்சாபில் நடந்த நிகழ்வை எப்படி கட்டமைத்தார்கள்?

மோடியின் உயிருக்கே அச்சுறுத்தல் என்று சொன்னார்கள்.

ராகுல் காந்தியின் உயிருக்கு அச்சுறுத்தல் என்றால், அப்படி சொல்லக்கூடாது என்று சொல்கிறார்கள்.

ஏன் ராகுல் காந்தியின் உயிருக்கு அச்சுறுத்தல் இல்லையா?

### ராகுல் காந்திக்கு அச்சுறுத்தல் இருக்கிறதா, இல்லையா?

நீங்கள்தான் சொன்னீர்கள், காந்தியடிகள் படுகொலை பற்றியும், இந்திரா காந்தி படுகொலை பற்றியும், ராஜீவ் காந்தி படுகொலைபற்றியும் அதனுடைய தொடர்ச்சியாக ராகுல் காந்திக்கு அச்சுறுத்தல் இருக்கிறதா, இல்லையா?

இன்றைக்கு ராகுல்காந்தி தான் கவனிக்கப்படுகின்ற தலைவர். இன்றைய பி.ஜே.பி. ஆட்சியை அகற்றுவதற்கு இந்தியா முழுவதும் நடைப்பயணம் சென்ற தலைவர். இன்றைக்கு அவர்தான் கவனிக்கப்படக் கூடிய தலைவர்.

ஆர்.எஸ்.எஸ்.சுக்கு நேர் எதிர் சித்தாந்தத்தை முன்வைத்து இன்றைக்குக் களத்திற்குப் போகக்கூடிய தலைவர்.

காங்கிரஸ் இவ்வளவு நாளும் பேசாத கருத்துகளைப் பேசி, காங்கிரசுக்கு உள்ளேயும் ஒரு மறுசீரமைப்பை கட்டமைத்திருக்கின்ற தலைவர்.

அப்படிப்பட்டவர் இன்றைக்கு நாட்டிற்குத் தேவையானவராக இருக்கிறார். அவருடைய உயிருக்கு மிகப்பெரிய அச்சுறுத்தல் இருக்கிறது.

அப்படிப்பட்டவர் அவைக்குள் இருக்கும் பொழுது, இப்படிப்பட்ட சம்பவம் நடக்கிறது என்றால், அதுவும் புதிய நாடாளுமன்றத்திற்குள் நடக்கிறது என்றால், அதைப்பற்றி கேள்வி கேட்கக்கூடாதா?

எங்கேயோ, ரோட்டில் நடந்ததுபற்றி தமிழ்நாடு அரசு பொறுப்பேற்க வேண்டும் என்று சொன்னீர்களே, முதலமைச்சர் பதவி விலகவேண்டும் என்று சொன்னீர்களே, இன்றைக்கு யார் ராஜினாமா செய்யப் போகிறீர்கள்?

### பிரதமர் மோடி கண்டித்தாரா?

நாடாளுமன்ற நிகழ்வுப்பற்றி இதுவரை ஒரு கண்டனம்கூட வரவில்லையே! நாடாளுமன்றத்திற்குள் இப்படி ஒரு அவலம் நடைபெற்று இருக்கிறது. ஆழமான தாக்குதல் நடந்திருக்கிறது, நாடாளுமன்றம் தாக்கப்பட்ட நாளில் நடந்திருக்கிறது, இதுவரையில் பிரதமர் வாய் திறந்து கண்டித்திருக்கிறாரா? உள்துறை அமைச்சர் கண்டித்திருக்கிறாரா?

நாட்டில் உள்ள எல்லா கட்சியும் கண்டித்திருக்கிறது. எல்லா தலைவர்களும் கண்டித்திருக்கிறார்கள்.

ஆனால், இப்படி ஒரு தாக்குதல் நடந்திருக்கிறதே, அதைக் கண்டிக்கிறோம் என்று சொன்னார்களா? அவர்கள் பதற வில்லையே ஏன்? பதறாததினுடைய பின்னணி என்ன? என்று நாங்கள் கேட்கிறோம்.

இதற்குப் பதில் வேண்டும் நமக்கு!

வேறு ஆட்சியில் இப்படி நடந்திருந்தால், இப்படி இருந்திருப்பீர்களா?

வேறு மாநில சட்டமன்றத்தில் இப்படி நடந்திருந்தால், உதாரணத்திற்கு, தமிழ்நாடு சட்டமன்றத்தில் இதுபோன்ற காட்சி நடந்திருந்தால், அண்ணாமலை சும்மா விட்டிருப்பாரா? எவ்வளவு பெரிய கருத்துகளைப் பரப்பி இருப்பார்கள்?

### எதிர்ப்பிரச்சாரம் செய்யும் பா.ஜ.க.!

இப்பொழுதே அவர்களுடைய கருத்தை எப்படி பரப்புகிறார்கள் என்றால், அந்தப் பரிந்துரைக் கடிதத்தை தி.மு.க. எம்.பி., கொடுத்திருக்கிறார் என்று பரப்புகிறார்கள்.

ஆக, அவர்கள் திட்டமிட்டு, இதுபோன்ற சம்பவங்களைக் கட்டமைப்பதும், அப்படிப்பட்ட சம்பவங்கள் நடந்த பிறகு அதை தூக்கி எதிர்க்கட்சிகளின்மீது பழியைப் போட்டு, எதிர்ப்பிரச்சாரம் செய்வதும் வழக்கமாகி விட்டது.

இளைஞர்கள் இப்படிப்பட்ட எதிர்மறையான சிந்தனைகளுக்கு ஆட்படக்கூடாது. இந்த நாடு ஜனநாயக நாடு, எவ்வளவு பெரிய சர்வாதிகாரத்தையும் அறவழியில் நின்று போராடி வீழ்த்திய வரலாறு நமக்கு உண்டு. இந்த நாட்டு விடுதலைப் போராட்டம் அதற்கு சாட்சியாக இருக்கிறது. இந்த நாட்டில் நடந்த சமூகநீதிப் போராட்டம் அதற்கு சாட்சியாக இருக்கிறது.

இந்த நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற மொழி உரிமைப் போராட்டங்கள் அதற்குச் சாட்சியாக இருக்கிறது. இப்பொழுதும் மாநில உரிமைப் போராட்டம் அதற்குச் சாட்சியமாக இருக்கிறது.

ஆளுநரை இன்றைக்குச் சட்டப்படிதான் சந்தித்துக் கொண்டிருக்கின்றோம். கூண்டில் நிறுத்தி கேள்வி கேட்டு, இன்றைக்கு ஒவ்வொரு உரிமையையும் நாம் மீட்டுக் கொண்டு வருகிறோம்.

இன்றைக்கு உச்சநீதிமன்றம் ஆளுநரை நோக்கி வைத்திருக்கின்ற கேள்வி உள்பட. ஆகவே, எதிர்மறையான எண்ணங்களுக்குப்போகவேண்டிய அந்தநிலை வரக்கூடாது. ஆனால், மோடி அரசு செய்கின்ற Polarisation (ஒருங்கிணைத்தல்) இளைஞர்களை இப்படித் தள்ளுகிறது.

### ஜோ பைடன் உள்ளிட்டோர் கருத்து தெரிவித்திருப்பர்!

இதுவே முஸ்லிம் இளைஞர்களாக இருந்திருந்தால் என்ற கேள்வி இருக்கிறது. இருந்திருந்தால் என்ன நடந்திருக்கும்?

மிகப்பெரிய அளவிற்கு இந்த நாடு இன்றைக்குக் கொந்தளித்திருக்கும்.

உலகமே இன்றைக்கு இந்தியாவை உற்றுநோக்கக் கூடிய அளவிற்கு, ஜோபைடன் வரையில் கருத்துத் தெரிவித்திருப்பார்கள். ஆனால், இங்கு மோடியே கருத்துச் சொல்லவில்லை.

இதுவே, நான்கு இளைஞர்கள் முஸ்லிம்களாக இருந்திருந்தால், இன்றைக்கு அமெரிக்கா கருத்துச் சொல்லியிருக்கும்; இஸ்ரேல் பிரதமர் அறிக்கை வெளியிட்டு இருப்பார். பிரிட்டன் கருத்துச் சொல்லியிருக்கும்.

உலகத்தினுடைய எல்லா நாட்டினுடைய தலைவர்களும் இன்றைக்கு இதைப்பற்றி பேசியிருப்பார்கள்.

இந்திய நாடாளுமன்றத்தின்மீது பயங்கரவாதிகள் தாக்குதல் என்று.

ஆனால், சம்பந்தப்பட்ட இந்திய நாட்டின் பிரதமரே இந்த நிமிடம்வரை இதைக் கண்டிக்கவில்லை என்கிற பொழுது செயல் இங்கே முக்கியமல்ல, செய்கின்ற நபர் யார் என்கிற அளவிற்கு ஒரு கருத்துருவாக்கம் வலிமை பெற்று நிற்கிறது.

இவற்றை வீழ்த்தவேண்டிய இடத்தில் நாம் இருக்கிறோம்.

### வரவைத்தவர்கள் யார்?

வந்தவர்கள் யார்? அவர்களுடைய பின்னணி என்ன? இவையெல்லாம் விசாரணை அமைப்பின் கைகளில் போயிருக்கிறது.

அதனால், வந்தவர்களைப்பற்றி நாம் பேசுவதைவிட, வர வைத்தவர்கள் அல்லது வர அனுமதித்தவர்கள் என்ற கோணத்தில் பார்ப்போம்.

உள்ளே விட்டவர்கள் குறித்துப் பேசுவதுதான் மிக முக்கியமானதாகும்.

எல்லோரும் நாடாளுமன்றத்திற்குள் போக முடியுமா?

உண்மையில் ஒரு அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடிய அளவிற்கு யாராவது உள்ளே வந்திருக்க முடியுமா?

அப்படி ஒரு சம்பவம் நடந்திருந்தால், ராகுல் காந்தி போன்ற தலைவர் உள்ளே இருக்கும்போது, அப்படி ஒரு சம்பவம் வந்திருந்தால், என்றுதானே நாம் பார்க்க வேண்டி இருக்கிறது.

எனவே, இது முழுக்க முழுக்க ஒன்றிய அரசின் தோல்வி முழுக்க முழுக்க பாதுகாப்பு குறைபாடு.

முழுக்க முழுக்க இதை விசாரிக்க வேண்டும். இதற்குப் பொறுப்பேற்று பிரதமர் பதவி விலகவேண்டும் உள்துறை அமைச்சர் பதவி விலகவேண்டும்!

இவ்வாறு ஆளூர் ஷாநவாஸ் எம்.எல்.ஏ. பேட்டியளித்தார்.



திராவிட முன்னேற்ற கழக இளைஞரணியின் இரண்டாவது மாநில மாநாடு வருகின்ற 24.12.2023 அன்று சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன்பாளையத்தில் நடைபெறவுள்ளதை முன்னிட்டு, கழக முதன்மை செயலாளர்/ நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு நேற்று முன்தினம் (14.12.2023) விழா முன்னேற்பாடு பணிகளை கழக நிர்வாகிகளுடன் ஆய்வு மேற்கொண்டார்.



திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருவெண்ணெய்நல்லூர் பேரூராட்சியில் பெடரல் வங்கி கிளையை கழக துணைப் பொதுச்செயலாளரும், உயர்கல்விதுறை அமைச்சருமான முனைவர் க.பொன்முடி திறந்து வைத்தார். விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்., மாவட்ட துணைச் செயலாளர் தயா. இளந்திரையன், ஒன்றியக் கழகச் செயலாளர் பி.வி.ஆர்.சு. விசுவநாதன், பேரூர் செயலாளர் பூக்கள் கணேசன், ஒன்றிய நிர்வாகிகள் மோகன்ராஜ், துணைத் தலைவர் ஜோதி, நிர்மல்ராஜ், மருத்துவர் அணி டாக்டர். காவிய வேந்தன், தகவல் தொழில்நுட்ப அணி ப.அன்பரசு, கிருஷ்ணராஜ் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

### வெளிநாடுகளுக்கு கல்வி - வேலைவாய்ப்புக்குச் செல்பவர்களுக்கு

# முன் பயண புத்தாக்கப் பயிற்சி மையம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை,டிச.16-

அயல்நாடுகளுக்கு கல்வி மற்றும் வேலைவாய்ப்பிற்காக செல்லும் தமிழர்கள் நலன் கருதி இராமநாதபுரம், புதுக்கோட்டை, கன்னியாகுமரி, தஞ்சாவூர், பெரம்பலூர், சிவகங்கை மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் முன் பயண புத்தாக்கப் பயிற்சி மையம் அமைத்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

தமிழர்கள் தொன்று தொட்டு வணிகம், வியாபாரம், கல்வி போன்ற காரணங்களுக்காக புலம்பெயர்ந்துள்ளனர். கால வளர்ச்சியில் பொருளாதார காரணங்களுக்காக தமிழர்கள், வேலை வாய்ப்பிற்காக பிற நாடுகளுக்கு அதிகளவில் செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டன, இவ்வாறு வேலை வாய்ப்பிற்காக வெளிநாடுகளுக்கு செல்லும் தமிழர்கள் பல்வேறு சூழ்நிலையால் சில நேரங்களில் இன்னல்களுக்கு ஆளாகின்றனர்.

அயல்நாடுகளுக்கு பணிக்கு செல்லும் தமிழர்கள் அங்கு அவர்களுக்கு உறுதியளித்தப்படி வேலை, வேலை நேரம், ஊதியம், உணவு, உறைவிடம், போன்ற பல்வேறு விசயங்கள் தொடர்பாக ஏற்படும் பிரச்சனைகளுக்கு, தமிழ்நாடு அரசின் அயலகத் தமிழர் நலத்துறையை தொடர்பு கொள்கின்றனர்.

அவ்வாறு அயலகத் தமிழர்களிடமிருந்து வரப்பெறும் கோரிக்கைகள் அயலகத் தமிழர் நலத்துறை மூலமாக அந்தந்த நாடுகளிலுள்ள இந்தியத் தூதரகங்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் தமிழ்ச் சங்கங்கள் உதவியுடன் தீர்வு காணப்பட்டு வருகின்றன.

இது போன்ற குறைகளைச் சரிசெய்ய "கல்வி மற்றும் வேலைவாய்ப்பிற்காகத் தமிழர்கள் புலம்பெயரும்போது, அவர்கள் செல்லும் நாட்டின் சட்டத்திட்டங்கள், கலாச்சாரம், மொழி மற்றும் வேலை தொடர்பான குறைந்தபட்ச முன் தயாரிப்புடன் செல்ல ஏதுவாக ஏற்கனவே சென்னையில் முன் பயணப் புத்தாக்கப் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு வெளிநாடுகளுக்கு வேலை வாய்ப்பிற்காக தமிழ் நாட்டிலிருந்து செல்லும் இளைஞர்கள் இது குறித்து போதிய முன்



அனுபவமோ போதிய தகவல்களோ இல்லாமல் செல்லும் நிலையே உள்ளது. அதுமட்டுமின்றி அவர்கள் வெளிநாட்டு வேலை வாய்ப்பு குறித்த விழிப்புணர்வு பெற தேவையான முன்பயண புத்தாக்க பயிற்சி பெற நீண்ட தூரம் பயணித்தும், கூடுதல் செலவு செய்தும் சென்னைக்கு வர வேண்டிய நிலையே உள்ளது.

அரசின் நல திட்டங்கள் அனைத்தும் அவரவர் வசிக்கும் பகுதியிலேயே வழங்கப்பட வேண்டும் என்பதே தமிழ்நாடு அரசின் நோக்கம். இந்த அடிப்படையில் 'முன்பயண புத்தாக்கப் பயிற்சி மையம்' சென்னை மட்டுமின்றி வெளிநாட்டிற்கு வேலைவாய்ப்பிற்காக செல்பவர்கள் அதிகம் உள்ள இராமநாதபுரம், புதுக்கோட்டை, கன்னியாகுமரி, தஞ்சாவூர், பெரம்பலூர், சிவகங்கை மற்றும் விழுப்புரம் ஆகிய ஏழு மாவட்டங்களிலும் அமைக்கப்படும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்.

அவ்வறிவிப்பினை நடைமுறைப்படுத்திடும் வகையில் ரூ.54,75,000/(ரூபாய் ஐம்பத்து நான்கு இலட்சத்து எழுபத்து ஐந்தாயிரம்) செலவில் முன்பயண புத்தாக்கப் பயிற்சி மையங்கள் அமைத்து தமிழ்நாடு அரசால் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

இந்த முன் பயண புத்தாக்கப் பயிற்சி மையத்தில் கீழ்க்கண்ட மூன்று பயிற்சிகள் வழங்கப்படவுள்ளது.

அ)வேலைத்தேடி வெளிநாட்டிற்கு செல்லும் அனைவருக்குமான முன் பயண புத்தாக்க பயிற்சி

ஆ)கட்டிட தொழிலாளர், ஓட்டுநர், எலக்ட்ரீசியன் மற்றும் வீட்டு வேலை போன்ற பணிகளுக்காக செல்பவர்களுக்கு இப்பணிகளுக்கான அடிப்படை தேவையான கல்வித் தகுதிகள் மற்றும் ஆவணங்கள் தொடர்பான தெளிவுகள் ஏற்படுத்துதல்.

இ) ஆங்கிலம் மற்றும் அரபு மொழி தொடர்பான அடிப்படை பயிற்சி.

மேற்காணும் பயிற்சிகளுடன் தேவைக்கேற்ப வீட்டு உபயோக மின் சாதனப் பொருட்களை கையாளுதல் போன்ற திறன் மேம்பாட்டு பயிற்சியும் அளிக்கப்படும்.

ஒன்றிய அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட வெளிநாடுகளுக்கு ஆட்களை அனுப்பும் முகவர் மூலம் வெளிநாட்டு வேலைக்குத் தேர்ந்தெடுக்க ப்பட்டு, வேலைவாய்ப்பு விசா இப்பயிற்சியில் பங்கேற்கலாம். இப்பயிற்சிக்காக வழங்கப்பட்டவர்கள் உருவாக்கப்பட்டுள்ள வலைதளத்தில் (nrtamils.tn.gov.in) முகவர்கள் மூலம் பயிற்சியில் கலந்து கொள்வோர் தங்களை பதிவு செய்யலாம். மேலும் புதியதாக வேலைக்கு செல்ல விரும்பும் நபர்களும் நேரடியாக பதிவு செய்து கொண்டு பயிற்சியில் பங்கேற்கலாம்.

பயிற்சியில் கலந்து கொள்வோருக்கு முன் பயண புத்தாக்க பயிற்சி கையேடுகள் மற்றும் பயிற்சியை நிறைவு செய்தவுடன் சான்றிதழ் வழங்கப்படும்.

மேலும், இப்பயிற்சி மையங்கள் மூலம் தமிழ் நாட்டிலுள்ள பன்னாட்டு விமான நிலையங்கள் மற்றும் ரயில் நிலையங்களில் விழிப்புணர்வு காணொளிகள் மூலமாகவும் மற்றும் கிராம சபைக் கூட்டங்களிலும் துண்டுப் பிரசுரங்கள் மூலமாகவும் அயல் நாட்டு வேலை தொடர்பான விழிப்புணர்வை பொது மக்களிடையே ஏற்படுத்தி தமிழர்கள் பாதுகாப்பான புலம் பெயர்தலை உறுதிப்படுத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

### கோவா விமான நிலையத்தில்

# தமிழ்ப் பெண்ணிடம் இந்தியில் பேசச் சொல்லி மிரட்டல்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கடும் கண்டனம்!

சென்னை, டிச. 16-

கோவா விமான நிலையத்தில் இந்தியில் பேசச் சொல்லி தமிழ்ப் பெண் ஒருவருக்கு ஏற்பட்ட நிகழ்விற்கு கண்டனம் தெரிவித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

கோவா விமான நிலையத்தில் தமிழ்ப் பெண் ஒருவரிடம் இந்தியில் பேசி, அவர் இந்தி தெரியாது என்று சொன்னதும் மத்திய தொழில் பாதுகாப்பு படை வீரர் ஒருவரால் மிரட்டப்பட்டுள்ளார். "தமிழ்நாடு இந்தியாவில்தானே இருக்கிறது" என்றும், "இந்தியாவில் உள்ள அனைவரும் இந்தியைக் கற்றாக வேண்டும்" என்றும் பாதுகாப்புப் படை வீரர் பாடம் எடுத்துள்ளார். இது கடும் கண்டனத்துக்குரியது.

இந்தி அலுவல் மொழியே தவிர தேசிய மொழியல்ல என்று அவருக்கு யார் சொல்வது?

பல்வேறு மொழி பேசும் மக்களின் கூட்டாட்சி நாடு இந்தியா. கூட்டாட்சித் தன்மையை வலியுறுத்தும் வகையில் தான் மத்தியத் தொழில் பாதுகாப்புப் படை வீரர்கள் செயல்பட வேண்டும். விமான நிலையங்களில் அனைத்து மொழிகளுக்கும் உரிய மதிப்பும் மரியாதையும் வழங்கப்பட வேண்டும்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### ஒருங்கிணைந்த மும்பை மாநில தி.மு.க. முன்னாள் செயலாளர் - மறைந்த

# த.மு.பொற்கோ இல்லத் திருமண வரவேற்பு விழா!

## கழகத்தினர் வாழ்த்துகின்றனர்!

*மும்பை, டிச. 16 -*

*பாந்த்ராவில் வசிக்கும் மறைந்த மும்பை தி.மு.க. செயலாளர் த.மு.பொற்கோவின் மூத்த மகன் பொ.அன்பழகன் - திருமதி சுகுணா அன்பழகன் ஆகியோரின் புதல்வி அ.அசுவினிக்கும், சென்னையைச் சேர்ந்த தி.ச.ரமேஸ் - திருமதி கீதா ரமேஸ் ஆகியோரின் புதல்வர் பிரசாந்த் பாபுவுக்கும், மும்பை மாட்டுங்கா கிழக்கு பகுதியில் உள்ள பயோனியர் மண்டபத்தில் திருமணம் நடைபெற்றது.*



*திருமண வரவேற்பு விழா மணமகள் வீட்டார் சார்பில் இன்று (16.12.2023 - சனிக்கிழமை) மாலை 7 மணிக்கு கொலாபா பகுதியில் அமைந்துள்ள பாம்பே பிரிசிடென்சி ரேடியோ கிளப்பில் நடைபெறுகிறது.*

*அதைத் தொடர்ந்து 21.12.2023 அன்று மணமகன் வீட்டார் சார்பில் சென்னையில் அண்ணா நகரில் அமைந்துள்ள ஐ.சி.எஃப்.திருவள்ளுவர் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.*

*இந்நிகழ்வில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உட்பட ஏராளமான முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்திசிறப்பிக்கின்றனர்.*

*விழாவிற்கான ஏற்பாடுகளை இரு வீட்டாரும் சிறப்பாக செய்து வருகிறார்கள்.*

*மும்பை மாநில முன்னாள் இளைஞர் அணி அமைப்பாளர் ம.சேசுராசு நன்றி கூறுகிறார்.*

# ஆலத்தூரில் ரூ.11.58 கோடியில் பல்வேறு புதிய திட்டப்பணிகள்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்தார்!

*பெரம்பலூர், டிச.16-*

*பெரம்பலூர் மாவட்டத்தில் போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் ரூ.11.58 கோடி மதிப்பீட்டில் பல்வேறு புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்ற பணிகளை தொடங்கி வைத்தார்.*

*இந்நிகழ்ச்சிகளில் போக்குவரத்துத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:*

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றதிலிருந்து ஏழை எளிய அடித்தட்டு மக்களின் நலனை கருத்தில் கொண்டு அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த எண்ணிலடங்கா திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார்கள்.*

*அதனடிப்படையில் ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் பல மக்கள் நலத்திட்டங்கள் இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. மேலமாத்தூர் ஊராட்சியில் சமக்ரா சிஷா திட்ட நிதியிலிருந்து பொதுப்பணித்துறை மூலம் ரூ. 20,52,000 மதிப்பீட்டில் மேலமாத்தூர் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு ஒரு கூடுதல் வகுப்பறை கட்டிடம் கட்டும் பணியும், ஆதனூர் ஊராட்சியில் முதலமைச்சரின் கிராம சாலை திட்டத்தின் கீழ் ரூ. 1,48,00,000 மதிப்பீட்டில் ஆதனூர் முதல் பிலிமிசை வரை தார்சாலை அமைக்கும் பணியும், சிறுகன்பூர் ஊராட்சியில் ரூ. 39,62,000 மதிப்பீட்டில் அரசு துணை சுகாதார நிலையம் கட்டிடம் கட்டும் பணியும், கொளக்காநத்தம் ஊராட்சியில் நெடுஞ்சாலை துறை மூலம் ரூ. 8,24,00,000 மதிப்பீட்டில் கொளக்காநத்தம் முதல் காரை வரை 4800 மீ. சாலையை மாநில சாலையாக தரம் உயர்த்தி அகலப்படுத்தும் பணியும் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.*

*இந்த பணிகள் அனைத்தும் மிக விரைவில் முடித்து பொது மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரும் வகையில் பணிகளை துரிதமாக மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.*

*மேலும், இலந்தங்குழி ஊராட்சியில் ஜல் ஜீவன் மிஷன் திட்ட சேமிப்பு நிதியிலிருந்து ரூ.15,00,000 மதிப்பீட்டில் கட்டப்பட்ட தண்ணீர் தொட்டியையும், ரூ.41,80,000 மதிப்பீட்டில் வீட்டுக்கு வீடு குடிநீர் குழாய் இணைப்பு வழங்கும் திட்டத்தினையும், குன்னம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் மூலம் ரூ. 6,00,000 மதிப்பீட்டில் போடப்பட்ட தார்சாலையினையும், கொட்டரை ஊராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.32,00,000 மதிப்பீட்டில் கொட்டரை ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக்கு 3 வகுப்பறை கொண்ட கட்டிடத்தினையும், குரும்பாபாளையம் ஊராட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.20,10,000 மதிப்பீட்டில் கட்டப்பட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கக் கட்டிடத்தினையும், காரை ஊராட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ. 11,00,000 மதிப்பீட்டில் கட்டப்பட்ட முழு நேர பொதுவிநியோகக் கட்டிடத்தினையும் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்துள்ளோம்.*

*தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காகவும், பொதுமக்கள் நலன் கருதியும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்திவரும் பல்வேறு திட்டங்களை பொதுமக்கள் முறையாக, முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று அமைச்சர் தெரிவித்தார்.*



அரியலூர் மாவட்டம், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்ப) லிட், ஜெயங்கொண்டம் கிளையில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக கும்பகோணம் கோட்டத்தில் பணிக் காலத்தில் உயிரிழந்தவர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் மரு.ம.ச.கலைவாணி, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி அரசு மற்றும் அரசு மாதிரிப் பள்ளிகளில் அளிக்கப்பட்ட சிறப்பு பயிற்சிகளின் பலனாக தலைசிறந்த உயர் கல்வி நிறுவனங்களில் சேர்ந்துள்ள 274 அரசுப் பள்ளி மாணவர்களையும் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி சந்தித்து வருகின்றார். அதன்படி கேரள மாநிலம் கண்ணூர் National Institute of Fashion Technology கல்லூரியில் இணைந்துள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த 6 அரசு பள்ளி மாணவர்களையும் சந்தித்து ஊக்கம் அளித்து கல்வி உபகரணங்களையும் வழங்கினார். தொடர்ந்து கோழிக்கோடு என்.ஐ.டி. கல்லூரியில் இணைந்துள்ள தமிழ்நாட்டைச் சார்ந்த அரசு பள்ளி மாணவர்களையும் சந்தித்து உரையாடினார். முன்னதாக தஞ்சாவூர், திருச்சி, சென்னையில் உள்ள உயர் கல்வி நிலையங்களில் இணைந்துள்ள அரசு பள்ளி மாணவர்களை சந்தித்து கல்வி உபகரணங்களையும் வழங்கி உள்ளார்.



புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் விராலிமலை கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மருத்துவ முகாம் மாவட்டக் கழகச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில், ஒன்றியக் கழகச் செயலாளர் மு.பி.ம.சத்தியசீலன் வரவேற்புரையில் பார்வையாளர், டாக்டர் அஞ்சுகம் பூபதி முன்னிலையில் நடைபெற்றது. முகாமை ஜோதி மணி எம்.பி. தொடங்கி வைத்தார். நிகழ்வில் மு.பி.மணி, முருகேசன், தென்னலூர் எம்.பழனியப்பன், ஆர்.ஆர்.சாமிநாதன், சாந்தி தங்க சிங்கம், டாக்டர் குறிஞ்சிவாணன், எஸ்.வி.ஆர்.ஆர்.ஸ்டாலின், விழாப்பட்டி சிவா, நாகராஜ் உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.



தருமபுரி மேற்கு மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றியக் கழக நிர்வாகிகள்,BLA2, ஊராட்சி பொருப்பாளர்களின் ஆலோசனைக் கூட்டம் ஒன்றியக் கழகச் செயலாளர் பி.எஸ்.சரவணன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் டிசம்பர் 24 ஆம் தேதி சேலத்தில் நடைபெறும் "நில உரிமை மீட்பு மாநாட்டில் பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் இளைஞரணியினர் பெரும் திரளாக கலந்து கொள்ள செய்வது, BLA2 வுக்கான வாக்காளர் குடும்ப வாரியான கணக்கு எடுக்கும் பணிகளை சிறப்பாக செய்வது போன்ற பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இந்நிகழ்ச்சியில் ஒன்றியக் கழக துணைச் செயலாளர்கள் வே.செல்வன், ஜாகிதாசெரீப், இராஜேந்திரன், மாவட்டப் பிரதிநிதிகள், பன்னீர்செல்வம், இராமன் மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.



நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு நேற்று (15.12.2023) திருவரங்கத்தில் புதியதாக அமையவுள்ள பேருந்து நிலையத்திற்கான கட்டுமானப் பணிகளை அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித்தலைவர் மா.பிரதீப் குமார், மாநகராட்சி மேயர் மு.அன்பழகன், ஸ்ரீரங்கம் சட்டமன்ற உறுப்பினர் மு.பழனியாண்டி, திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையர் இரா.வைத்திநாதன், மாவட்ட நகர் ஊரமைப்புக் குழு உறுப்பினர் க.வைரமணி உதவி ஆணையர்கள், மாநகராட்சி அலுவலர்கள், மண்டல தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை இராணியார் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில், மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி நேற்று (15.12.2023) வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஐ.சா.மெர்சி ரம்யா, சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே. செல்லபாண்டியன், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் திருமதி.ஜெயலட்சுமி தமிழ்செல்வன், நகர்மன்றத் தலைவர் திருமதி.திலகவதி செந்தில், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திருமதி.எம்.மஞ்சுளா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

# ‘அயலகத் தமிழர் தினம் 2024’

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் ஜன 12 - அன்று நடைபெறுகிறது!

சென்னை, டிச.16-

“அயலகத் தமிழர் தினம் 2024” ஜனவரி 12, 2024, சென்னை வர்த்தக மையத்தில் முதலமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற உள்ளது. தமிழ் இலக்கியம், கல்வி, சமூக மேம்பாடு, மகளிர், வணிகம், அறிவியல் தொழில்நுட்பம், விளையாட்டு மற்றும் மருத்துவம் ஆகிய 8 பிரிவுகளில் சிறந்து விளங்கும் அயலகத் தமிழர்களுக்கு விருது வழங்கப்படுகிறது.

முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 12 ஆம் நாள் அயலகத் தமிழர் தினமாகக் கொண்டாடப்படும் என்று அறிவித்ததன் அடிப்படையில் 2022 மற்றும் 2023இல் அயலகத் தமிழர் தினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

தொடர்ந்து மூன்றாம் ஆண்டாக “அயலகத் தமிழர் தினம் 2024” 11.01.2024 & 12.01.2024 ஆகிய இரண்டு நாட்களில், முதலமைச்சர் அவர்கள் தலைமையில் “தமிழ் வெல்லும்” என்ற கருப்பொருளில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்வில், பல்வேறு கலை நிகழ்ச்சிகள், அமர்வுகள், சிறப்பு கண்காட்சிகளுடன், நந்தம்பாக்கத்தில் உள்ள சென்னை வர்த்தக மையத்தில் (Chennai Trade Centre) சிறப்பாக நடத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியை மேலும் சிறப்பிக்கும் விதமாக, தமிழ் இலக்கியம், கல்வி, சமூக மேம்பாடு, மகளிர், வணிகம், அறிவியல் தொழில்நுட்பம், விளையாட்டு, மருத்துவம் ஆகிய 8 பிரிவுகளில் சிறந்து விளங்கும் தமிழர்களுக்கு,

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கரங்களால் “அயலகத் தமிழர் தினத்தில்” விருது வழங்கி கவுரவிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

எனவே, அயல்நாடுகளில் தமிழ் இலக்கியம், கல்வி, சமூக மேம்பாடு, மகளிர், வணிகம், அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், விளையாட்டு, மருத்துவம் ஆகிய எட்டு துறைகளில் தலைசிறந்து விளங்கும் தமிழர்கள் அயலகத் தமிழர் நலத்துறையின் வலைதளத்தின் (https://nrtamils.tn.gov.in/en/) வாயிலாக, விண்ணப்பங்களை அனுப்பி வைக்கலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

அயலகத் தமிழர் தினத்தில் பங்கேற்பது, மற்றும் நிகழ்வுகள் தொடர்பான பிற விவரங்களுக்கு (https://nrtamils.tn.gov.in/en/) கொள்ளப்படுகிறது. அயலகத் தமிழர் நலத்துறையின் வலைதளத்தின் வாயிலாக அறிந்து கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

### இராணுவ பாதுகாப்பு ஆராய்ச்சி அமைப்பு

# தருமபுரி மாவட்டத்தில் அமைத்திடுவீர்!

## மக்களவையில் டாக்டர். டி.என்.வி.செந்தில்குமார் வலியுறுத்தல்!



புதுடெல்லி, டிச.16-

தருமபுரியில் ராணுவ பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பு (DRDO) அமைக்க வேண்டும் என்று தருமபுரி எம்.பி. டாக்டர் டி.என்.வி செந்தில்குமார் நாடாளுமன்ற மக்களவையில் விதி 377-ன் கீழ் வேண்டுகோள் விடுத்தார்.

தருமபுரி நாடாளுமன்றத் தொகுதியில் 2010-ம் ஆண்டு ராணுவ பாதுகாப்பு ஆராய்ச்சி மையம் அமைக்க பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பு (DRDO) எடுத்த முயற்சி குறித்து அரசின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

தர்மபுரி மாவட்டம் நெக்குந்தி கிராமத்தில் உள்ள நிலத்தை மாநில அரசும், மாவட்ட நிர்வாகமும் அடையாளம் கண்டு பரிந்துரை செய்யபட்டது. பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பு (DRDO) அதிகாரிகளும் அந்த இடத்தை ஆய்வு செய்தனர். இருப்பினும், முன்மொழியப்பட்ட திட்டம் இன்னும் தொடங்கப்படவில்லை.

தர்மபுரி தொழில்துறையில் பின்தங்கிய பகுதியாக இருப்பதால், இத்திட்டத்தின் மூலம் வேலைவாய்ப்புகளை உருவாக்கி, மாவட்டத்தை தொழில் வளம் மிக்க பகுதியாக மாற்ற உதவும். இந்த DRDO ஆராய்ச்சி மையம் 15,000 பேருக்கு வேலை வாய்ப்பை உருவாக்கும் மற்றும் மேக் இன் இந்தியா முயற்சிக்கு உந்துதலாக செயல்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

எனவே தருமபுரி மாவட்டத்தின் மேம்பாட்டிற்கான ஆராய்ச்சி மையத்தைத் தொடங்கவும், முன்மொழியப்பட்ட திட்டத்தை விரைவுபடுத்துவதற்கான பணிகளை உடனடியாகத் தொடங்கவும் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பு (DRDO)வுக்கு பாதுகாப்புத் துறை அமைச்சரகம் உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு அவர் வலியுறுத்தினார்.

### மயிலாடுதுறை - கும்பகோணம் ரெயில் தடத்திலுள்ள

# காங்கேயம் பேட்டையில் சுரங்கப்பாதை அமைத்திடுக!

## மக்களவையில் செ.இராமலிங்கம் வலியுறுத்தல்!



புதுடெல்லி, டிச.16-

“மயிலாடுதுறை - கும்பகோணம் இடையே உள்ள ரெயில் தடத்தில் காங்கேயம் பேட்டையில் சுரங்கப் பாதை உடனே அமைக்க வேண்டும்” என்று நாடாளுமன்ற மக்களவையில் செ.இராமலிங்கம் வலியுறுத்தினார்.

இது குறித்து மக்களவையில் அவர் பேசியதாவது:-

மயிலாடுதுறை-கும்பகோணம் இடையே உள்ள புகைவண்டி தடத்தில் திருபுவனம் பேரூராட்சிக்குட்பட்ட காங்கேயம் பேட்டை கிராமத்திற்கு தொடர் சாலை வசதி கிடையாது. ரெயில் தண்டவாளம் குறுக்கிடுவதால் அவசர காலத்திற்கு ஆம்புலன்ஸ், தீயணைப்பு வாகனங்களன் கூட செல்ல இயலவில்லை.

பள்ளி, கல்லூரி மாணவர்கள் செல்ல முடியவில்லை. மருத்துவமனை மற்றும் அங்காடிகளுக்கு கூட பொது மக்கள் செல்ல இயலவில்லை.

ஒருமுறை இக்கிராமத்தில் மிகப்பெரிய தீவிபத்து ஏற்பட்டபோது தீயணைப்பு வாகனங்கள் உள்ளே செல்ல இயலவில்லை. இதனால் பெருத்த சேதம் ஏற்பட்டது.

ஒருமுறை நானே சோழன் விரைவு ரெயிலை, செயினை இழுத்து அந்த இடத்தில் நிறுத்தி இந்த அவலத்தை எடுத்துரைத்தேன்.

தெற்கு ரெயில்வே பொது மேலாளர் இந்த இடத்தை நேரில் பார்வையிட்டு உடனடியாக தண்டவாளத்திற்கு கீழே சுரங்கப்பாதை அமைத்து தொடர்பு சாலை ஏற்படுத்தி தருவதாக சொன்னார். பலமுறை ரெயில்வே துறை அமைச்சரிடத்தில் கோரிக்கை வைத்தும் இன்று வரை இந்த சுரங்கப்பாதை அமைக்கப்படவில்லை. எனவே உடனடியாக அமைத்துத் தர நான் வற்புறுத்துகிறேன்.

இவ்வாறு செ. இராமலிங்கம் பேசினார்.

### ஆளுநராக இன்றி - தமிழிசை சௌந்தரராஜன்

# பா.ஜ.க. தலைவராகவே செயல்பட்டு வருகிறார்!

## சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!



பா.ஜ.க. மாநில தலைவராகவே அவர் தற்போது வரை கருதிக் கொண்டு இருக்கிறார் என்றுதான் நினைக்கின்றோம்.

புதுக்கோட்டை, டிச.16 -

புதுக்கோட்டை அடுத்த திருவேங்கைவாசல் விளக்கு பகுதியில் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் தெரிவித்ததாவது:

தமிழ்நாட்டில் ஆளுநர் மாளிகை இருக்கக்கூடிய ஒரு தெருவில் நடந்த சம்பவத்திற்கு சட்டம் ஒழுங்கு கெட்டுள்ளது. தேசிய புலனாய்வு விசாரணை தேவை என்றெல்லாம் கேட்டார்கள். ஆனால் தற்போது நாடாளுமன்றத்தில் நடந்த சம்பவம் கண்டிக்கத்தக்கது. இந்திய இறையாண்மைக்கு எதிராக எந்த ஒரு சம்பவம் நடந்தாலும் முதல் குரல் எழுப்பக் கூடியவர் தமிழ்நாடு முதலமைச்சர். இறையாண்மை பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் மிகவும் அக்கறையானவர். தேச நலன் காக்கப்படுவதில் தி.மு.க.விற்கு மாறுபட்ட கருத்து கிடையாது.

அன்றைக்கு தேசிய புலனாய்வு அமைப்பு விசாரணை நடத்த வேண்டும் என்று கூறியவர்கள் இன்று எந்த அமைப்பை அழைக்கப் போகிறார்கள் என்று தெரியவில்லை.

இது நாடாளுமன்றத்திற்குள்ளேயே நடந்துள்ளது என்பது கண்டிக்கத்தக்கது என்று சொன்னாலும் கூட மிகுந்த பாதுகாப்பை மீறி நாடாளுமன்றம் தாக்குதல் நடைபெற்ற 21 ஆம் ஆண்டு அனுசரிப்பு தினத்தில் அந்த நாளில் ஏதாவது அசம்பாவிதம் நடந்தால் மிக மிக அசிங்கம் என்று தெரிந்தும் பாதுகாப்பு கோளாறு எப்படி ஏற்பட்டது. எப்படி உள்ளே இருவர் சென்று கலர் புகை குண்டை எடுத்து செல்ல அனுமதித்தனர். இதையெல்லாம் விசாரணை அமைப்பு தான் கண்டுபிடித்து சொல்ல வேண்டும். உள்ளேயே சதி நடந்ததா வெளியே சதி நடந்ததா யாருக்கு தொடர்புள்ளது இதையெல்லாம் எந்த விசாரணை அமைப்புகள் விசாரிக்கப் போகிறதோ அந்த அமைப்புகள் கண்டுபிடித்து சொல்ல வேண்டும். நல்ல தீர்ப்பு நாட்டு மக்களுக்குக் கிடைத்தால் சரி. எப்போதும் ஒரு கட்சியின் எம்.பி. அனுமதி கடிதம் கொடுக்கும் போது தனக்கு நன்றாக அறிமுகமானவர்களுக்கு தான் கொடுப்பது வழக்கம். ஆனால் இந்த விவகாரத்தில் எப்படி பா.ஜ.க. எம்பி கொடுத்தார் என்று தெரியவில்லை. நான்கு பேர் ஆறு பேர் என்றெல்லாம் கூறுகிறார்கள் இவர்கள் அனைவரும் வெவ்வேறு மாநிலங்களை சேர்ந்தவர்கள். அவர்கள் எவ்வாறு ஒன்று கூடினார்கள் என்பது வியக்கத்தக்க ஒன்று. அவர்களுக்கு எவ்வாறு கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த மைசூர் எம்பி அனுமதி கடிதம் கொடுத்து பரிந்துரை செய்தார் என்பது கேள்விக்குறியாக உள்ளது.

ஆளுநராக இருக்கக் கூடிய தமிழிசை சௌந்தர்ராஜன் மட்டும்தான் அதிகப்படியான பேட்டிகளை கொடுத்து வருகிறார். மற்ற ஆளுநர்கள் இதுபோன்று பேசுவது கிடையாது. தமிழிசை சௌந்தர்ராஜனைப் பொருத்தவரை தமிழ்நாடு பா.ஜ.க. மாநில தலைவராகவே அவர் தற்போது வரை கருதிக் கொண்டு இருக்கிறார் என்றுதான் நினைக்கின்றோம்.

சிறையில் இருக்கக் கூடிய சிறைவாசிகளின் மன உளைச்சலைப் போக்க அவர்களது குடும்பத்தார்கள் குழந்தைகள் எவ்வாறு இருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்வது அவசியமாக உள்ளது. மன உளைச்சலில் இருந்து அவர்களை மீட்பதற்காக அவர்கள் குடும்பத்தாருடன் அதிக நேரம் பேசுவதற்கும் வீடியோ கால் மூலம் பேசுவதற்கும் வாய்ப்புகளை உருவாக்கித் தந்து மன உளைச்சலை குறைத்து அவர்கள் குடும்பத்துடன் இருக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை இன்றைக்கு தமிழ்நாடு சிறைத்துறை உருவாக்கித் தந்துள்ளது

இவ்வாறு அமைச்சர் எஸ். ரகுபதி தெரிவித்தார்.



விழுப்புரம் மாவட்டம் திண்டிவனத்தில் நடைபெற்ற பெண்களுக்கு எதிரான வன்கொடுமை ஒழிப்பு மற்றும் வரதட்சணை கொடுமை விழிப்புணர்வு பேரணியை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சிமஸ்தான் தொடங்கி வைத்தார். உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சேதுநாதன், வட்டாட்ச்சியர் சிவா, நகரமன்றதலைவர் நிர்மலா ரவிச்சந்திரன், ஆணையர் தமிழ்செல்வி, மாவட்ட அவைத்தலைவர் டாக்டர் சேகர், நகர செயலாளர் கண்ணன் உள்ளனர்




புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி வட்டம், குளந்திரான்பட்டு கிராமத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில் (13.12.2023) அன்று நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஐ.சா.மெர்சி ரம்யா, தலைமையில், பயனாளிகளுக்கு விலையில்லா தையல் இயந்திரங்களை வழங்கினார். உடன் கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே. செல்லபாண்டியன், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மா.செல்வி, கறம்பக்குடி ஒன்றியக் குழுத் தலைவர் திருமதி.மாலா ராஜேந்திரதுரை, புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) மு.செய்யது முகம்மது, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருச்சி நாகசுந்தரம்

### டிசம்பர் 16 (2003)



தமிழக சட்டமன்ற உறுப்பினராகவும் – திருச்சி மாவட்டக் கழக அவைத் தலைவராகவும் – தென் இந்திய நலவுரிமைச் சங்க உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

திருச்சி நகர்மன்ற உறுப்பினர், நகர்மன்ற எதிர்க்கட்சித் தலைவர், தொழிற்சங்கத் தலைவர் ஆகிய பொறுப்புக்களை ஏற்றுப் பணியாற்றியவர்.

தேவிகுளம்–பீர்மேடு; மும்முனை, இந்தி எதிர்ப்பு, விலைவாசி ஆகிய போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர். நெருக்கடி நிலையின்போது மிசாவில் ஓராண்டு காலம் சிறையில் இருந்தவர்.

“கட்சிக்காக என்ன செய்தேன் என்று கேட்கின்றவர்களுடைய பட்டியலில் உள்ளவர் என்னுடைய அருமைத் தோழர், உடன்பிறப்பு நாகசுந்தரம்” என தலைவர் கலைஞரால் பாராட்டப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**


முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (14.12.2023) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு நேரடி நியமன முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் சங்கத்தின் மாநிலத் தலைவர் ஆ. ராமு மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு தமிழ்நாடு நேரடி நியமன முதுநிலை பட்டதாரி ஆசிரியர்கள் சங்க உறுப்பினர்களின் ஒருநாள் ஊதியத்தை வழங்குவதற்கான ஒப்புதல் கடிதத்தை வழங்கினார்.


முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (14.12.2023) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கத்தின் மாநிலத் தலைவர் கு. தியாகராஜன் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்க உறுப்பினர்களின் ஒருநாள் ஊதியத்தை வழங்குவதற்கான ஒப்புதல் கடிதத்தை வழங்கினார்கள். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, உள்ளார்.


முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (14.12.2023) தலைமைச் செயலகத்தில், தமிழக ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி மாநில பொதுச் செயலாளர் இரா. தாஸ் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு தமிழக ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி உறுப்பினர்களின் ஒருநாள் ஊதியத்தை வழங்குவதற்கான ஒப்புதல் கடிதத்தை வழங்கினார்கள்.


முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (14.12.2023) தமது முகாம் அலுவலகத்தில் பணியாற்றும் எஸ். தனபால் – ஆர். சந்தனபிரியா ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்து, மணமக்களை வாழ்த்தினார். உடன் திருமதி. சாந்தா ஸ்டாலின் அவர்களும் – மணமக்களின் குடும்பத்தினரும் உள்ளனர்.


முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (14.12.2023) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு மேல்நிலைப் பள்ளி தொழிற்கல்வி ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் நேரு மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு தமிழ்நாடு மேல்நிலைப் பள்ளி தொழிற்கல்வி ஆசிரியர் சங்க உறுப்பினர்களின் ஒருநாள் ஊதியத்தை வழங்குவதற்கான ஒப்புதல் கடிதத்தை வழங்கினார்.


வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், அம்முண்டி ஊராட்சியில் வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையின் 2023–2024 ஆம் ஆண்டுக்கான கரும்பு அரைவையை நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி நேற்று முன்தினம் (14.12.2023) தொடங்கி வைத்தார்கள். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் பெ.குமாரவேல்பாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் திருமதி அமலு விஜயன், ஜே.எல். ஈஸ்வரப்பன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு. பாபு, கூட்டுறவு சர்க்கரை ஆலை மேலாண்மை இயக்குநர் திருமதி கு.நர்மதா, காட்பாடி ஒன்றிய குழு தலைவர் வேல்முருகன், காட்பாடி 1 வது மண்டல குழு தலைவர் திருமதி புஷ்பலதா வன்னியராஜா, காட்பாடி ஒன்றிய குழு துணைத்தலைவர் சரவணன், வருவாய் கோட்டாட்சியர் திருமதி.கவிதா மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், துறை சார்ந்த அலுவலர்கள், ஆலை நிர்வாகிகள், விவசாய பெருமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.







# உடன்பிறப்பே... 36

**தி.மு.க என்பது எதிரிகளால் அழிக்கமுடியாத இரும்புக்கோட்டை. இந்தக் கோட்டையைக் கட்டியெழுப்பி, இயக்க வரலாற்றில் இடம்பிடித்த தீரர்கள் சிலரை, வாரா வாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், இந்த வாரம், பெரியார்-அண்ணா-கலைஞருடன் பயணித்து கழகம் வளர்த்த நன்னிலம் நடராசன் அவர்களைப் பற்றிப் பார்ப்போம்.**

# நன்னிலம் நடராசன்: நகைச்சுவையால் கொள்கை ஊட்டியவர்!



ஓவியம் : ரவி பேலட்

“பெரியோர்களே, தாய்மார்களே.. நண்பர்களே.., இளைஞர் அணியைச் சேர்ந்த தம்பிமார்களே...” என ஒரு கரகரத்த குரல் மெல்லிய ஓடைபோல கழக மேடைகளில் ஒலிக்கத் தொடங்கும். தொண்டர்கள் சிரிப்பலைகளை எதிர்பார்த்திருக்கும் நேரத்தில் அவரது பேச்சு, வாகனத்தின் உச்ச வேகத்தைபோல ஏறும். தொண்டர்கள் சிரித்து மாள்வார்கள். முதல்முறையாக அந்தப் பேச்சைக் கேட்பவர்கள் கிறங்கிய தேனீயாகத் திளைப்பர்.

கழக மேடைகளில் கலைஞர், பேராசிரியர் எனத் தலைவர்கள் கலந்துகொண்டு சிறப்புரை நிகழ்த்துவார்கள். அல்லது தலைமைக் கழக நிர்வாகிகள் செல்வார்கள். அதற்கு முன்னர் தொண்டர்களைத் தயார்படுத்துவது, தலைவர்கள் வரும் வரை அவர்களைச் சோர்வடையாமல் உற்சாகமாக வைப்பது என மேடைகளைத் தன்வசப்படுத்துவது கழக முன்னணி தளகர்த்தர்களின் வழக்கம். அப்படி மேடைகளைத் தன்வசம் செய்த முன்னணிக் கள வீரர்களில் ஒருவர்தான், நன்னிலம் நடராசன்.

“இளமைப் பருவம் முதல் இறுதி நாள் வரை கழகத்தின் கொள்கை முழக்கம் செய்தவர். தன்னுடைய நகைச்சுவைப் பேச்சால் தமிழகத்தின் பட்டித்தொட்டியெங்குமுள்ள கழகத் தோழர்களின் அன்பைப் பெற்றவர்” என கழகம் போற்றிய தளகர்த்தர், அண்ணாவின் தம்பி, முத்தமிழறிஞர் கலைஞரின் அன்புக்குரிய உடன்பிறப்பு, இந்த நன்னிலம் நடராசன்.

## நகைச்சுவைப் பேச்சாளர்

நெற்களஞ்சியம் என உணவுப் படியளக்கும் டெல்டா மாவட்டங்களில் ஒன்றான திருவாரூர் மாவட்டத்தில் குடவாசல் வட்டத்திலுள்ள அபிவிருத்தீசுவரம் கிராமத்தில் பிறந்தவர் நன்னிலம் நடராசன். தந்தை அண்ணாசாமி அவர்களுக்கும், தாயார் தனபாக்கியம் அவர்களுக்கும் 1928-ஆம் ஆண்டு செப்டம்பர் 20-ஆம் தேதி பிறந்தவர் நடராசன்.

இளம் வயதிலேயே அரசியல் ஆர்வம் கொண்டிருந்தவர், அந்தப் பகுதியில் தீவிரமாகப் பரவிக் கொண்டிருந்த திராவிடர் கழகச் செயல்பாடுகளில் ஆர்வம் கொண்டு, ஈடுபடத் தொடங்கினார். இயல்பிலேயே நகைச்சுவை உணர்வு கொண்டிருந்த நடராசன், தனது பேச்சுக்களில் அரசியல் கருத்துகளைப் பிரச்சாரம் செய்யத் தொடங்கினார்.

திராவிடர் கழகம், திருவாரூர், கலைஞர் என சுழலத் தொடங்கிய அவரது வட்டம், திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கப்பட்டதும், அதில் இணைந்து சுற்றத் தொடங்கியது. அவரது சொந்த ஊரில் சைக்கிள் கடை வைத்து தொழிலைச் செய்தவர், கழக மேடைகளில் பம்பரமாகச் சுற்றத் தொடங்கினார்.

## நாவன்மையும் நடை வன்மையும்

கழகம் எனும் ஆலமரத்தின் அடிவேர்களில் ஒன்றாக விளங்கிய நன்னிலம் கிளைக் கழகத்தைக் கட்டிக் காக்க, செயலாளர் பொறுப்பினை ஏற்று இருபது ஆண்டுகள், நன்னிலம் வட்டத்தில் கழகத்தை ஆல் போல் வளர்த்தார். அன்றைய ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில் அவர் கால்படாத ஊர்களே இல்லை எனும் அளவுக்குக் கழகம் வளர்த்தவர்.

> **இயல்பான தஞ்சை மாவட்ட மொழிநடையில் நகைச்சுவை ததும்ப அவர் நிகழ்த்திய கொள்கைச் சமர், காலத்தால் நிலைத்து நிற்பவை.**

தி.மு.கழகம் நடத்திய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த போராட்டங்களில் தலைவர் கலைஞர் அவர்களின் தலைமையில் பங்கேற்றவர் நடராசன். நெருக்கடி நிலை காலத்தில் ஜனநாயகம் காத்திட, மிசா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறைக் கொடுமையை அனுபவித்தார்.

பெயர் அறியாத சிற்றூர்களுக்கும், கால்நடையாக நடந்து சென்று கழகக் குரலைக் கடத்தியவர் நடராசன். பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் எழுதியதையும் பேசியதையும் பாமர மக்களுக்கு இன்னும் எளிமையாக, தனது நகைச்சுவையான பேச்சுத் திறனால் கொண்டு சேர்த்தவர். கழகத்தை மேடைகளில் பேசியே வளர்த்த பெருமைக்குரியவர்களில் ஒருவராக விளங்கியவர் நன்னிலம் நடராசன். அவரது மேடை ஆளுமையே நடராசனுக்கு, ‘நன்னிலம் நடராசன்’ என அடைமொழியைக் கொண்டு வந்தது.

“நாவன்மை படைத்த நன்னிலம் நடராசன் தமிழகத்தின் நகரங்களில் மட்டுமல்ல, பட்டி தொட்டிகளில் கழகக் கொள்கைகளை மேடை தோறும் முழங்கி வந்தவர். படித்தவர்கள் மட்டுமல்ல, பாமரரும் புரிந்துகொள்ளும் வகையில் நகைச்சுவையோடு பேசக்கூடிய ஆற்றல் வாய்ந்தவர்” என கலைஞரால் புகழப்பெற்றவர்.

## சன்மானமும் கடன்காரர்களும்

எந்தச் சோதனைகள் வந்தாலும் சோர்வு காணாத உள்ளம் கொண்டவர். சட்டமன்றத்தைப் பற்றிக் கவலைப்படாமல் மக்கள் மன்றத்திலேயே தமது பணியினைத் தொய்வின்றி ஆற்றி வந்தவர். அவர் ஏற்றுக் கொண்ட இயக்கம் தி.மு.கழகம். அவர் நெஞ்சார ஏற்றுக்கொண்ட ஒரே தலைவர் கலைஞர் என நின்ற தளகர்த்தர் நடராசன்.

எதையும் எதிர்பார்க்காத இவரது தியாகத்தைப் பாராட்டிப் போற்றும் வகையில், 1991-ஆம் ஆண்டு கழகத்தின் முப்பெரும் விழாவில் தலைமைக் கழகத்தின் சார்பில் ‘கலைஞர் விருதினை’ தலைவர் கலைஞர் அவர்கள் கரங்களாலேயே வழங்கிச் சிறப்பித்தார்.

கழகத்தின் கொள்கைப்பரப்பு இணைச் செயலாளராகச் சுழன்ற நன்னிலத்தாருக்கு, 1999-ஆம் ஆண்டு ‘பெரியார் விருது’ அளிக்கப்பட்டது. அப்போது பேசிய தலைவர் கலைஞர் அவர்கள், விருதுடன் ஒரு லட்சம் ரொக்கத் தொகை அளிக்கப்படுகிறது என அறிவித்தார். விருது பெற்றதும் பேசிய நன்னிலம் அவர்கள், “தலைவர் எனக்கு விருதுடன் பணம் அளிப்பதை மேடையிலேயே சொல்லிவிட்டார். இதைக் கேட்டதும், நாளை என் வீட்டு வாசலுக்குக் கடன்காரர்கள் வந்து நிற்பார்கள். அதனால் நான் ஊருக்குப் போவதா, சென்னையிலேயே தங்கி விடுவதா என யோசனையில் இருக்கிறேன்” என தனது நகைச்சுவைப் பேச்சால் கலைஞரையே கட்டிப்போட்டவர்.

## மருத்துவமனை தங்காத மனம்

அவர் கடைசியாகக் கலந்துகொண்ட கூட்டம், 2002 ஜனவரி 25-ஆம் தேதி, ஒரத்தநாட்டில் நடைபெற்ற மொழிப்போர்த் தியாகிகள் நினைவுக்கூட்டம். அவர் கலந்து கொண்ட கடைசித் திருமண நிகழ்வு, இன்றைய இளைஞர் அணிச் செயலாளர் அவர்களுடையது. கழகம், கலைஞர், கழக மேடைகள், கோடானகோடி கழகத் தொண்டர்களின் கரவொலி, சிரிப்புமழை என நிம்மதி கொண்டவர் நடராசன்.

சிறிது உடல் நலம் குன்றி இருந்தவர், 2002 மார்ச் மாதம் 12-ஆம் தேதி இயற்கையில் கலந்தார். அதற்கு ஒரு வாரத்துக்கு முன்னர், உடல்நலம் குன்றிய நிலையில் அண்ணா அறிவாலயம் வந்து, கலைஞரைச் சந்தித்தார். கலைஞர் அவரை உடனடியாக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல வைத்து சிகிச்சையில் சேர்த்தார். ஆனால், நன்னிலமோ எல்லாம் சரியாகிவிடும் என மருத்துவமனையில் இருந்து சொல்லிக்கொள்ளாமல் கிளம்பிவிட்டார். அதையறிந்து கலைஞர் அவரது ஊருக்கு போன் செய்து கடிந்து கொள்கிறார். இப்படித் தலைவன் - தொண்டன் உறவினைக் கொண்டிருந்த கொள்கைத் தங்கம் என, அவர் குருதியில் கொண்டிருந்த கழக உணர்வை, கலைஞரைச் சந்தித்து ஆற்றுப்படுத்திக் கொண்ட நிகழ்வை, அவர் மறைவின்போது கலைஞர் எழுதிய இரங்கல் குறிப்பு துயர காவியமாகத் துக்கம் கொண்டிருந்தது..

“நன்னிலம் என்றாலே நன்னிலம் நடராசன் என்று பெருமை சேர்த்த கொள்கைத் தங்கம் மறைந்துவிட்டார்” என கலைஞர் அவரது குரலில் ஓர் இரங்கற்பா வெளியிட்டார். இயல்பான தஞ்சை மாவட்ட மொழிநடையில் நகைச்சுவை ததும்ப அவர் நிகழ்த்திய கொள்கைச் சமர், காலத்தால் நிலைத்து நிற்பவை. அவற்றைக் காத்து வைக்கும், கழகத்தின் வீரர் சபை.

**...துடிக்கும்**


## தகவல்களின் முழுமை!

சமூக ஊடகங்கள் செய்திகளைத் தருபவை அல்ல. அவை தருவது எல்லாம் வெறும் தகவல்கள். அந்தத் தகவல்களில் இப்போது இன்னொரு பரிமாணம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதுதான் ‘செர்ரி பிக்கிங்’ என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும், அரைகுறை தகவல்கள். அதாவது, ஒரு நிகழ்வு பற்றிய செய்தியிலிருந்து முழுமையான தகவல்களைத் தராமல், தங்கள் அரசியலுக்குத் தோதான சில விஷயங்களை மட்டும் எடுத்துக் கொண்டு கம்பு சுற்றுவது.

அதற்கு மிகச்சிறந்த உதாரணம், சபரிமலைக்குச் சென்றுவிட்டு, தனது தந்தையைக் காணவில்லை என்று கதறிய சிறுவனின் வீடியோ. இணையத்தில் வைரலாகி வரும் அந்தக் காட்சி மூலம், கேரள கம்யூனிஸ்ட் கட்சி, இந்துக்களுக்கு எதிராகச் செயல்படுகிறது என்று வதந்தி பரப்பப்படுகிறது.

ஆனால், உண்மையில் நடந்தது என்ன? சபரிமலைக்கு அப்பாவுடன் வந்த மகன், ஒருகட்டத்தில் அப்பாவைக் காணவில்லை என்று அழ, அங்கு பாதுகாப்புப் பணியிலிருந்த காவலர்கள், அவனது தந்தையைக் கண்டுபிடித்து அவரிடம் பையனை ஒப்படைக்கிறார்கள். இவை அனைத்தும் அங்கிருந்த ஒருவர் எடுத்த வீடியோவில் பதிவாகியுள்ளது. ஆனால், உண்மைத் தன்மையை அறியாமல் வீடியோவின் ஒரு பகுதியை மட்டும் வெட்டி வதந்தி பரப்பப்படுகிறது. இதுவும் ஒரு வகையில் பொய்ச் செய்திதான் என்றாலும், இதர பொய்ச் செய்திகளை விடவும் மிகவும் ஆபத்தானது. ஏனென்றால், இது செய்தி எனும் முலாமைப் பூசிக் கொண்டு வருகிறது. எனவே சமூக ஊடக நுகர்வில் கவனம் தேவை!

## :ப்ளாஷ்பேக்



## வாழ்த்தும் பொற்கிழியும்!



சிதம்பரம்

1976-ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் ‘மிசா வழக்கு நிதி’ சேகரிக்க, மதுரைக்கு வருகை தந்த போது சமயநல்லூர் கிளைக் கழகம் சார்பாக, தலைவரிடம் வழக்கு நிதி வழங்கி வாழ்த்துப் பெற்றேன். இன்றைக்கு என்னுடைய வயது 82. தலைவர் கலைஞரின் பேரன் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கையால் பொற்கிழி பெற்றபோது பழைய நினைவுகள் எல்லாம் என் மனதில் நிழலாடுகின்றன.

**-எஸ்.சிதம்பரம், அவைத் தலைவர், சமயநல்லூர் கிளை, மதுரை.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### மருத்துவக் கல்வி மறுமலர்ச்சிக்கு நூறாண்டு!

**1923-ஆம் ஆண்டு நீதிக்கட்சி இரண்டாவது முறையாக வெற்றி பெற்று, மதராஸ் மாகாணத்தின் முதலமைச்சராக பனகல் அரசர் மீண்டும் பொறுப்பேற்றவுடன், மருத்துவம் படிக்க சமஸ்கிருதம் தேவை என்ற கட்டுப்பாட்டினைத் தகர்த்தார். சென்னையில், முதன்முதலாக இந்திய மருத்துவக் கல்லூரியை ஏற்படுத்தியவரும் அவர்தான். அவற்றின் மூலம் தமிழ் மாணவர்கள் மருத்துவக் கல்வி பயில்வதில் மறுமலர்ச்சி உருவானது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 330




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131